Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-12 28-09-2004 செவ்வாய்க்கிழமை ஓசை -223

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10149) T.P: 024-222 4247



## விடுதலைப் புலிகளின் அரசியல்குழு இன்று ஐரோப்பிய நாடுகளுக்குப் புறப்படுகிறது

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான விடுதலைப்புலிகளின் அரசியற் குழு இன்று ஐரோப்பிய நாடுகளுக்குப் புறப்பட்டுச் செல்கிறது. பகல் 11.30 மணியளவில் இக்குழு கிளிநொச்சியிலிருந்து உலங்கு வானூர்தி மூலம் புறப்பட்டுச் செல்கிறது.

இக்குழுவில் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்டோர் அங்கம் வகிக்கின்றனர்.

ஜெனிவாவுக்குச் செல்லும் இக்குழு அங்கு தமிழ் அரசியலமைப்புச் சட்ட நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவதோடு மனித உரிமை அமைப்புக்களோடும் சந்திப்புக்களை நடத்தவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் இருந்து செல்லும் விடுதலைப்புலிகளின் குழுவினருடன் லண்டனில் இருந்து வரும் அரசியல் ஆலோசகர் (12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா – ரொரன்ரோ 'பொங்கு தமிழ்' பிரகடனம்

கனடா ரொரன்ரோவில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வின் போது பொங்கு தமிழ்ப் பிரகடனம் ஒன்று மக்களால் வெளியிடப்பட்டது. அதன் விபரம் வருமாறு;

கனடாவில் உள்ள ரொரன்ரோ மாநகரில் செப்ரெம்பர் மாதம் 25ஆம் நாள், 2004 சனிக்கிழமை, இப்பொங்குதமிழ் நிகழ்வில் பல ஆயிரக்கணக்கில் கூடியுள்ள கனடா வாழ் மக்களாகிய நாம் இப்பிரகடனத்தை எமது உறவுகளின் உரிமைக் குரலாகவும், எமது உணர்வுகளின் வெளிப்பாடாகவும், ஏகோபித்த குரலில் எமது கனேடிய அரசின் முன்னும், சர்வதேச சமூகத்தின் முன்னும் வைக்கின்றோம்.

நோர்வே மத்தியஸ்தத்துடன்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## – இலங்கை, ஐக்கிய நாடுகள் சபை –

# மனித உரிமை அமைப்பின் அதிகாரிகளை யாழ். பொலிசார் அடித்து விரட்டினர்!

### கைதியைப் பார்வையிடச்சென்ற வேளை நடந்த விபரீதம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் நலன்கள் குறித்து விசாரணை செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரிகள் பொலிசாரால் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.**

நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

2000ஆம் ஆண்டு வெடிகுண்டு வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டிப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்திரகுமார் (வயது - 23) என்பவர் நீதிமன்ற உத்தரவின் பெயரில் ஏற்கனவே, பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார். நேற்று முன்தினம் மாலை அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கைது செய்த பொலிசார் அவரை யாழ். பொலிஸ் நிலையத திற்குக் கொண்டு சென்று விட்டனர்.

நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவரை காரணமின்றிக் கைது செய்தமை குறித்துப் பொலிசார் எதுவித உண்மைகளையும் கூறமறுத்ததால் அச்சமடைந்த அவரின் உறவினர் இது குறித்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனது மனித உரிமை மீறப்படுவதாக யாழ். விவசாயி வழக்குத்தாக்கல்

தனது வாழ்விடத்திற்குச் செல்லும் உரிமையும் அங்கு தனது காணியில் விவசாயம் செய்வதற்கான உரிமையும் படையினரால் மறுக்கப்படுவதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று அடிப்படை மனித உரிமைகள் வழக்கொன்றினைத் உயர் நிதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பில் வசிக்கும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த எஸ். தங்கராசா என்ற விவசாயியே உயர் நீதிமன்றில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்துள்ளார். 1990 ஆம் ஆண்டு யுத்தத்தில் இடம் பெயர்ந்து சென்று தான் பண்டத்தரிப்பில் தற்காலிகமாக வாழ்ந்து வந்ததாகவும் பின்னர் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின் தனது பிறந்த மண்ணிற்குச் சென்று மீளக் குடியேறி தனது விவசாயத்தைத் தொடர அனுமதி கேட்டதாகவும் ஆயினும் படையினர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் தனது வழக்கில் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதிகளாகப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, யாழ்ப்பாணம் இராணுவக்கட்டளைத் தளபதி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதரணி) உறுப்பினர் இணுவில் பகுதியில் சுட்டுக்கொலை



வலிகாமத்தின் மருதனார் மடத்திற்கும், இணுவிலுக்கும் இடையே காங்கேசன்துறை வீதியில் வைத்து ஈ.பி.ஆர், எல்.எவ் (வரதரணி) உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான இவர் கடந்த ஆண்டில் இடம்பெற்ற பாராளுமன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது ஐ.நா. சபை அழுத்தம் கொடுக்க வேண்டும்!

### - ஐ.நா.செயலரிடம் சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனச் சனாதிபதி கோரியுள்ளார் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காகச் சென்ற அவர் அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் கொபி அனானையும் சந்தித்து உரையாடினார். இதன் போது சனாதிபதி இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக தாம் அமைக்கத் திட்டமிட்டுள்ள அனைத்துக் கட்சி ஆலோசனைச் சபைத் திட்டம் தொடர்பில் அனானுக்கு விளக்கமளித்ததாக மாத்திரமே சனாதிபதியின் செயலகம் இலங்கை மக்களுக்குத் தெரிவித்திருந்தது. எனினும் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அனானிடம் கேட்டுக் கொண்டதையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் விழா நேற்று ஆரம்பம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருவள்ளுவர் விழா முதல் நாள் நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி தமிழ்ச் சங்கச் செயலர் பரமநாதபிள்ளை தலைமையில் ஆரம்பமாகிய திருவள்ளுவர் விழா முதல் நாள் நிகழ்வில் பொதுசசுடரினை கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை மாவீரரின் தந்தையான சி.பெருமாள் ஏற்றி வைத்தார். தமிழ்ச்சங்கக் கொடியினை சங்கத் தலைவர் அ.கனகரத்தினம் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கேற்றலினையடுத்து மண்டப நிகழ்வு ஆரம்பமாகியது.

வரவேற்புரையினைக் கூட்டுறவு திணைக்களத்தைச் சேர்ந்த ந.பத்மநாதன் நிகழ்த்தினார். தலைமையுரையினையடுத்து கருத்துரைகள் இடம் பெற்றது. கருத்துரையினைத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தி, ஆசிரிய ஆலோசகர் திருமதி மதுரநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

கிளிநொச்சி திருநெறிக்கழகத் தலைவர் வே.மகாலிங்கம் (தமிழ் ஐயா) துணைத்தலைவர் சிவஞானம், மற்றும் துறைசார் ஆர்வலர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பெருமளவிற் கலந்து கொண்டனர். மாலை கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)




(கிளிநொச்சி திருவள்ளுவர் விழாவில்...)

# சர்வதேச சிறுவர் வார நிகழ்வுகள்
## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச சிறுவர் வாரத்தினைக் கிளிநொச்சியில் வெகு சிறப்பாக கொண்டாடத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

நேற்று ஆரம்பமான இச் சிறுவர் வாரமானது முதலாம் திகதி வரை வெகுசிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படவுள்ள இவ் வாரமானது ஒவ்வொரு பிரதேசத்திலும் இயங்கிவரும் முன்பள்ளிகளின் சிறார்கள் 12 வயதிற்குட்பட்ட சிறார்கள் என அனைவரையும் பங்குகொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள இதே வேளை நேற்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் இந் நிகழ்வினை அனுஷ்டிக்கும் முகமாக பொது மருத்துவ மனைகளில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். இன்று பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளை புனரமைப்புச் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் றொபேட் முன்பள்ளியும், அக்கராயன் பிரதேசத்தில் கரித்தாஸ், பைந்தமிழ் முன்பள்ளிகளும், வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பிரபா முன்பள்ளி, மனோ முன்பள்ளி ஆகியவையும் பளைப்பிரதேசத்தில் ஆதவன் முன்பள்ளியும், கண்டாவளைப் பிரதேசத்தில் மயூரன் முன்பள்ளியும், பூநகரிப் பிரதேசத்தில் தனபால் முன்பள்ளியும், முழங்காவிலில் லாலா முன்பள்ளியும் புனரமைக்கப் படவுள்ளன. அத்தோடு 29 ஆம் திகதி இந்நாளை நினைவுகூரும் முகமாக மரநடுகை விழாவும் நடைபெறவுள்ளன. 30 ஆம் திகதி முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் 12வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் பிரதேச ரீதியாக நடைபெறும் .

இச் சிறுவர் வாரத்தின் சிறப்பு நிகழ்வாக முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு, கிளிநொச்சி சந்திரன் பூங்காவிலிருந்து சிறுவர்கள், பிரதம விருந்தினர்கள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு அங்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 156 முன்பள்ளிகளின் கொடிகள் பறக்க விடப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப் படவுள்ள இதே வேளை இந் நிகழ்வில் பிரதேச ரீதியாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். இங்கு சிறுவர்கள் கௌரவிக்கப் படுவதோடு சிறுவர்களால் முதியவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து சிறார்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வுகளில் போராளிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுவர்களின் பெற்றார்களெனப் பலரும் கலந்து கொள்வதற்கான ஒழுங்குகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற் கொண்டுள்ளனர். (ச)

# துணுக்காய்ப் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

துணுக்காய்ப் பிரதேச ஐயன் கன்குளம் கிராமத்தில் மாதாந்த வீர முரசு நிகழ்வு கடந்த 21ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் ஐயன் கன்குளம் அ.த.க பாடசாலை வளாகத்தில் பாடசாலை முதல்வர் திருமதி. குமுதினி ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஏற்றி வைக்க, திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை ஊரகத் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர், கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஆகியோர் எற்றிவைத்தனர். மலர் மாலையினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அணிவித்தார். அகவணக்கம் செலுத்தப்பட்டு தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனத்தைத் தேராங்கண்டல் கலைமகள் சிறுவர்பூங்கா சிறுவர்கள் நிகழ்த்தினார்கள். கருத்துரையினை கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் தேராங்கண்டல் கலைமகள் பூங்கா சிறார்களின் நடனம், நாடகங்கள் ஐயன்கன் குளம் பாடசாலையின் வரலாறு தந்த புலிகள் என்ற உரைச் சித்திரம் ஆசிரியர் தர்மபூபதியின் நெறியாள்கையில் உருவான சோகத்தின் பரிசு, கவிதை, பாட்டு, நாடகம் என்பவற்றோடு, மல்லாவி வானொலி மன்றக் கலைஞர்களின் இன்னிசை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந் நிகழ்வில் கிராமசேவையாளர்கள், தேசிய எழுச்சிப்பேர்வை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (24)

-புதுக்குடியிருப்புப் பகுதியில்

# தொடர் மழை காரணமாக நெல் அறுவடை பாதிப்பு

புதுக்குடியிருப்பில் தற்போது பெய்துவரும் தொடர் மழைகாரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கை பெரும் அழிவுக்குள்ளாகி வருகின்றது. இதனால் விவசாயிகள் பெரும் அவலங்களை எதிர் கொண்டுள்ளதுடன் பாரிய கஷ்ரங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.அறுவடை மேற்கொண்டு வரும் இவ் வேளையில் இவ் அவலம் இடம் பெற்றுள்ளது. மேலும் அறுவடையினை மேற் கொள்வதற்குப் போதிய ஆளணியின்மையால் பெரும் நெருக்கடிக்குள் விவசாயிகள் உள்ளாகியுள்ளனர். இந்நிலை தொடருமானால் அறுவடையினை மேற் கொள்ளாமலே அழிவுகளைச் சந்திக்க நேரிடலாம்.

மேலும் இம்மழை தொடர்ந்து பெய்யுமானால் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை சில பகுதிகளில் மேற்கொள்ள முடியாமல் போகும் நிலை ஏற்படலாம் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (08)

# "ஆயிஷா" ஒரு பள்ளி மாணவியின் கதை
## கிளிநொச்சியில் அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

இரா. நடராசன் அவர்களின் அறிவியற் கண்ணோட்டத்துடன் எழுதிய நூல் அறிமுக நிகழ்வு நாளை பி.ப 2.00 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் இரா. நடராசன் அவர்களின் அறிவியற் கண்ணோட்டத்துடன் எழுதிய "ஆயிஷா" ஓர் பள்ளி மாணவியின் கதை நூல் அறிமுக நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் குறித்த நேர ஒழுங்கின் படி இடம் பெறவுள்ளது. (தீ)

## தண்ணீர் கொள்கலன் வழங்கல்

பள்ளிக்குடாக் கடற் தொழிலாளர்களின் கஷ்ர நிலையைக் கண்டு பூநகரிப் பிரதேச செயலாளரால் தண்ணீர் கொள்கலன் ஒன்று வழங்கப்பட்டுக் கடற்கரையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான நீரை பூநகரி.அ.பு. வாழ்வுக் கழகம் நிரப்பிக் கொடுக்கும் இதற்கு மீனவர்கள் நன்றியைத தெரிவிக்கின்றனர். (34)

# இனியவாழ்வு இல்லத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு விழா

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தின் ஏழாம் ஆண்டு நிறைவுவிழா இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன.


## கிளி.மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் கவனத்திற்கு!

கிளி. மாவட்டத்தில் இது வரை காலமும் சங்கத்தில் பதிவுசெய்யாமல் இருக்கின்ற முச்சக்கர வண்டிகளை எதிர்வரும் 30. 09. 2004ஆம் திகதிக்கு முன்னர் தங்களை பதிவுசெய்து கொள்ளுமாறு சங்கம் தெரியப்படுத்துகின்றது.

பதிவு செய்யத்தவறும் பட்சத்தில் அதனைச் சங்கத்தால் இனம் காணப்படின் பதிவுப்பணம் இரட்டிப்பாக அறவிடப் படுமென்பதனை மனவருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றது.

கிளி.மாட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம்,
கிளிநொச்சி.

(5134)


## தவறிவிட்டது

முருகேசு ராஜ்குமார் ஆகிய எனது சில முக்கிய ஆவணங்களும் உடுப்புக்களும் அடங்கிய கறுப்பு நிற பேக் ஒன்று 22.09.2004 அன்று கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (4696)

## சாவு அறிவித்தல்
### திருமதி. நாகேஸ்வரி சிவானந்தம்

மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிவானந்தம் 27.09.2004 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சிவானந்தத்தின் பாசமிகு மனைவியும் திருக்குமார் (லண்டன்), தர்சினி, காலம்சென்ற சுதாகர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உதயரஞ்சன் (சுவர்னா வெதுப்பகம் சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமியாரும் நல்லையா, கண்ணம்மா, கந்தசாமி (மல்லாவி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் துஸ்யந்தன், சிந்துஜா, அபர்னா, கேதுயன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.09.2004 அன்று 12 மணியளவில் சொட்டுப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(சி.10441)

தகவல்
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்
### அமரர். கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

எமது சபையின் தொ.நு.உத்தியோகத்தர் திரு.க.வி.கந்தசாமி அவர்களின் தந்தையார் க.விஸ்வலிங்கம் அவர்கள் 24.09.2004 அன்று அமரத்துவம் அடைந்த செய்தியறிந்தோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாங்களும் துயர் பகிர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விசேடஆணையாளர், பணியாளர்கள்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.
(ஊழியர் நலன்புரிச்சங்கம்)

(சி.10236)


## கணினியியல் கல்லூரி

கணினியியல் கல்லூரியில் பின்வரும் கற்கை நெறிகள் 29.09.2004 முதல் ஆரம்பம்

**Diploma in MS Office XP**
**Diploma in Desktop Publishing**
**Diploma in Computer Studies**

மேற்குறிப்பிடப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களும் புதிதாக விண்ணப்பிக்க இருப்பவர்களும் 29. 09. 2004 புதன்கிழமை காலை 09. 00 மணிமுதல் தமது பதிவுகளை உறுதிப் படுத்தி நேர அட்டவணையை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கணினியியல் கல்லூரி,
யாழ்சாலை,கிளிநொச்சி.

(சி.10439)

# பிரிட்டன் தொ.கட்சி மாநாட்டில் ஈராக் பிரச்சினைக்கு உறுப்பினரின் வற்புறுத்தலின் பேரில் முக்கியத்துவம்

(லண்டன்)

**பிரிட்டனின் ஆளும் தொழிற்கட்சி மாநாட்டில் நேற்று உள்ளூர் விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ஈராக்கிய பிரச்சினை முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.**

சிறுவர் நலன் ஓய்வூதியம், கல்வி சம்பந்தமாகப் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படும் என பிரதமர் ரொனிபிளேயர் அறிவித்திருந்தார். ஆனால் ஈராக்கில் அதிகரித்து வரும் தாக்குதல்கள், ஈராக் தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் பிரஜைக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் என்பன முதலில் ஆராயப்பட வேண்டும் என்று அங்கத்தவர்கள் வற்புறுத்தினர்.

அமெரிக்கா தலைமையில் நடத்தப்படும் ஈராக்கிய யுத்தத்திற்கு ஆதவளிக்கப்பட வேண்டும் என்ற வகையில் பிரதமர் வெளியிட்ட கருத்து சம்பந்தமாகப் பல்வேறு விமர்சனங்களைத் தெரிவித்த உறுப்பினர்கள் ஈராக்கிய யுத்தம் சம்பந்தமான விவாதம் ஒன்று நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஈராக்கின் மொசூல் நகரில் நடைபெற்ற கார்க்குண்டு தாக்குதலில் சேதமடைந்த இடத்தை அவதானிக்கும் ஈராக் தேசியப் படைவீரர்.



ஜோர்தானிய ஈராக்கிய எல்லையில் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையினர்.

–தீவிரவாதிகளின் தாக்குதலுக்கஞ்சி–

# ஈராக்கிலிருந்து கிறிஸ்தவர்கள் சிரியாவிற்கு இடப் பெயர்வு

(பாக்தாத்)

ஈராக்கில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மதுபானக் கடைகள் ஆகியவை மீது தாக்குதல் நடத்தப்படுவதால் பீதி அடைந்த கிறிஸ்தவர்கள் அந்த நாட்டை விட்டு வெளியேறி சிரியாவில் குடியேறி வருகிறார்கள். ஈராக்கில் மொத்த மக்கள் தொகை இரண்டு கோடியே 50 இலட்சமாகும். அவர்களில் 3 சதவீதம் பேர் கிறிஸ்தவர்கள். இவர்கள் பாரம்பரியமாக ஈராக்கில் வசித்து வருகிறார்கள். அரசியல் ரீதியாக இவர்கள் குரல் என்றுமே உரத்து ஒலித்தது கிடையாது. இந்த நிலையில், ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அமெரிக்காவுக்கு எதிராக மட்டுமல்லாமல் ஈராக்கிய கிறிஸ்தவர்களுக்கும் எதிராகத் திரும்பியது. இந்த நிலையில் பாக்தாத்தில் உள்ள 5 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது கார்க்குண்டு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டன. அத்தோடு மதுபானக் கடைகள் அழகு நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டன. தலைமுடி தெரியவும், உடல் தெரியவும், உடைஉடுத்தும் கிறிஸ்தவப் பெண்களை அவமதிக்கும் சம்பவங்களும் நடக்கத் தொடங்கின. இதனால் பீதியடைந்த ஈராக்கிய கிறிஸ்தவர்கள் ஈராக்கில் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று உணரத் தொடங்கினர். இதனால் அவர்கள் ஈராக்கை விட்டு வெளியேறி வருகிறார்கள். சதாம் ஹுசைனின் குடும்பத்தினரும் அவரால் ஒடுக்கப்பட்ட சியா முஸ்லிம்களும் சிரியாவில் குடியேறியதைப் போல ஈராக் கிறிஸ்தவர்களும் சிரியாவில் குடியேறி வருகின்றார்கள். சிரியா அரபு நாடுதான். ஆனாலும் மதச்சார்பற்றது. அங்கு சிறுபான்மை இனமாக வசிக்கும் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களில் வெளிப்படையாக வழிபாடு நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"கடந்த இரண்டு மாதங்களில் சிரியாவில் குடியேறும் ஈராக்கியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது" என்று ஐ.நா. அகதிகள் அமைப்பின் சட்ட அதிகாரி ஜய்மல் கைபாரி கூறினார். ஈராக்கிய கிறிஸ்தவ கட்சியான அசிரியன் சனநாயக இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் இமானுவேல் கூறுகையில், "பத்தாயிரம் ஈராக்கிய கிறிஸ்தவர்கள் இப்போது சிரியாவில் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஈராக்கில் போர் தொடங்கிய பிறகு குடியேறியவர்கள்" என்று கூறினார்.

# கண்டுபிடிக்க முடியாத நடமாடும் மனிதர் பின்லேடன் எங்கிருக்கிறாரென தெரியாதென்கிறார் முஷாரப்

(நியூயோர்க்)

"சர்வதேச தீவிரவாதி பின்லேடன் ஒளிந்திருக்கும் இடம் எனக்குத் தெரியாது" என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார். அமெரிக்காவின் சனாதிபதித் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் நான்காம் திகதி நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய சனாதிபதி புஷ் குடியரசுக்கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார். "சர்வதேச தீவிரவாதி பின்லேடனை அமெரிக்க தேர்தல் திகதிக்கு முன்னதாக அமெரிக்கப் படையினர் பிடித்து விடுவார்கள். இதன் மூலம் புஷ் மீண்டும் பதவிக்கு வந்து விடுவார் என்று அமெரிக்காவில் பரவலாகப் பேசப்படுகிறது.

இது பற்றி அமெரிக்கா வந்துள்ள பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நிருபர்களுக்குத் தெரிவிக்கையில்; சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள பின்லேடன் கண்டுபிடிக்க முடியாத நடமாடும் மனிதர் அவர் எங்கு பதுங்கியிருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியாது. அமெரிக்கத் தேர்தலுக்கு முன் அவர் பிடிபட்டுவிடுவார் என்று கூறமுடியாது. பின்லேடன் எங்கே இருக்கிறார்? என்று யாரும் கணிக்க முடியாது. அவர் பிடிபட்டு விட்டாலும் மறைக்க முடியாது.

ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூற முடியும். பின்லேடன் சாகவில்லை, உயிரோடு இருக்கிறார். அவரை உயிரோடு பிடிக்க முடியுமா? அல்லது அவரைப் பிணமாகத்தான் கைப்பற்ற முடியுமா? என்பதை உறுதியாகக் கூற முடியாது. இந்தப் பூமியில் மலைப் பகுதிகள் அதிகம் உள்ளன. அவை மறைந்து கொள்ள மிக வசதியாக இருக்கின்றன. பாகிஸ்தானில் பின்லேடனைப் பிடிக்கப் பல முறை முயன்றோம். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பாகிஸ்தானில் தீவிரவாதத்தை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறேன். பாகிஸ்தானில் உள்ள சர்வதேச தீவிரவாதத்தை அடக்குவோம். ஆனால் இதை ஒரே நாளில் செய்ய முடியாது.



புளோரிடாவில் வீரோ கடற்கரையைத் தாக்கிய ஜான் சூறாவளியின் போது தூக்கி எறியப்பட்ட ட்ரக் வண்டியொன்று



கெயிட்டில் ஐ.நா அமைப்பினர் வழங்கும் உணவு, குடிநீருக்காக காத்து நிற்கும் மக்கள்.

# காசாவில் உலோகப்பட்டறை இஸ்ரேல் படையால் தாக்கி அழிப்பு

**வெடிகுண்டு தயாரிக்கும் இடமென இஸ்ரேல் அறிவிப்பு**

(ஜெருசலேம்)

காசா அகதிகள் முகாமில் உள்ள ஒரு உலோகப்பட்டறை மீது இஸ்ரேல் இராணுவ உலங்கு வானூர்தி குண்டு வீசித் தாக்குதல் நடத்தி அழித்துள்ளது. இந்தப் பட்டறையில் இருந்து, 'ஹமாஸ்' தீவிரவாதிகள் வெடி குண்டுகளைத் தயாரித்து வருவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. பலஸ்தீன தீவிரவாதிகள் அகதிகள் முகாமருகில் உள்ள யூதர்கள் குடியிருப்பு மீது குண்டு வீசித் தாக்கினர் இதில் 24 வயது யூதப் பெண் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இந்த தாக்குதல்கள் காசாப் பகுதியில் இருந்த யூதர்கள் குடியேற்றம் வாபஸ் பெறுவதைச் சிக்கலாக்கி உள்ளது.

# சவுதியில் பிரெஞ் பிரசை சுட்டுக்கொலை

(ரியாத்)

சவுதி அரேபியாவில் வசித்து வரும் பிரெஞ்சுக்காரர் ஒருவர் ஜெட்டா நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் பெயர் லாரண்ட் பார்போர்ட் 41 வயதான அவர் நள்ளிரவு 1.00 மணிக்கு இரவு அங்காடி முன்பு நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறிய போது சுட்டுக் கொல்லப்பட்டார். என்ன காரணத்திற்காக அவர் கொல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. அல்ஹைதாத் தீவிரவாதிகள்தான் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்க வேண்டும் என்று பொலிசார் சந்தேகிக்கிறார்கள். கொலைகாரர்களைப் பொலிசார் தேடி வருகிறார்கள்.

## வெள்ளப் பெருக்கு

பங்களாதேசத் தென்மேற்குப் பகுதியில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. 80 கிராமங்கள் வெள்ள நீரில் சூழப்பட்டுள்ளன. வெள்ள நீரால் கிணறுகள் மூடப்பட்டதால் பாதுகாப்பான குடிநீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. நோய்கள் ஏற்படும் ஆபத்தும் உருவாகியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும் நீரும் வழங்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

# தலிபானின் மூத்த தளபதி உட்பட மூவர் ஆப்கானில் சுட்டுக் கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலைமறைவாகச் செயற்படும் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான மவுலவி கபார் உருஸ்கான் மாநிலத்தில் உள்ள கிராமத்தில் 2 ஆதரவாளர்களுடன் நடந்து சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார். ஆப்கானிஸ்தானில் தீவிரவாத எதிர்ப்பு யுத்தத்தை அமெரிக்கா தொடங்கிய போது கைதான இவர் கியூபாவில் உள்ள அமெரிக்க இராணுவச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து விடுதலையான பிறகு ஆப்கானிஸ்தான் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லை மாவட்டத்தில் நிகொட் திட்டத்தில்-

# ரூ.100 மில்லியனில் புனரமைக்கப் படவுள்ள பாடசாலையைத் தெரிவு செய்ய குழு அமைப்பு


(முல்லை)

**முல்லை மாவட்டத்தில் மகா வித்தியாலயத் தரத்தில் உள்ள பாடசாலைகளில் ஒன்றை நிகொட் நிறுவனத்தின் உதவியில் 100 மில்லியன் ரூபாவில் புனரமைப்பதற்கான தெரிவினை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று முல்லை மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் அரசஅதிபர் தலைமையில் நடைபெற்றது.**

இவ்விடயம் தொடர்பாகத் தெரியவருவதாவது,100 மில்லியன் ரூபாவில் மாவட்டத்தில் ஒரு பாடசாலை புனரமைப்புச் செய்வதற்கான நிலை உருவாகியுள்ளதால் இதில் எந்தப் பாடசாலையைத் தெரிவு செய்வது என்பதே பிரச்சினை எனவும், இதில் அதிபர்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு தகுந்த பாடசாலையைத் தெரிவு செய்வதற்கு உதவவேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார். வலயக்கல்விப்பணிமனையினரும் கூடிய கவனம் எடுத்து பாடசாலையைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும்,இதனால் வேறு பிரச்சினைகள் வராது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் முல்லை மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா-சுகுமார் தெரிவித்தார்.

இறுதியில் இதற்காக ஒரு குழு அரசஅதிபர் தலைமையில் ஒழுங்கு படுத்தப்பட்டு அக் குழு மூலம் ஒரு பாடசாலையைத் தீர்மானிப்பதென முடிவு எடுக்கப்பட்டது. அதனை சகல அதிபர்களும் ஏற்றுக் கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் இளங்குமரன், கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், கல்வி அதிகாரி குருகுலராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏனைய மகாவித்தியாலயத்தின் அதிபர்கள், முல்லை மாவட்டகடற்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் ம.ரங்கன், முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)



தியாகி திலீபனின் 17ஆம்ஆண்டு நினைவையொட்டி தியாகி திலீபன் நடமாடும் மருத்துவசேவையினரால் வவுனியா வடக்குப் பகுதியில் மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வரும் கிராமங்களில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமின் போது வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றுகிறார். (லோ.தீ)

# வட்டக்கச்சியில் உலர் உணவுடனான திட்டத்தின் கீழ் சிரமதானம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உலர் உணவுடனான திட்டத்தின் கீழ் தொடர்ந்து சிரமதானப் பணி நடை பெற்று வருகின்றது.

ஆறுமுகம் வீதி மக்கள் கடந்த வெள்ளியன்று வட்டக்கச்சி பொது வைத்தியசாலை, உபதபாலகம் என்பனவும், மறுநாள் சனிக்கிழமை ஆறுமுகம் வீதி முருகன் ஆலய வளாகமும் சிரமதானம் செய்யப் பட்டது.

சில்வா வீதி மக்களால் சனிக்கிழமை புதுப்பாலத்தை அண்டிய வீதிகள் துப்புரவாக்கப்பட்டு மற்றும் நீர் பாய்ந்து ஓடக் கூடிய வாறு வாய்க்கால்கள் வெட்டப்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி இரு நாட்களிலும் இராமநாதபுரம் குளம், இராமநாதபுரம், கல்மடுநகர் மக்களால் சிரமதானப்பணி நடைபெற்று வருகின்றது. இச்சிரமதானப் பணியானது தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# கோழி வளர்ப்போர் கவனத்திற்கு!

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசங்களில் வளர்ப்புக் கோழிகளுக்கு மல்லாவி கால்நடை வைத்தியர் பணிமனையில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் தடுப்பூசி ஏற்றப்படுகிறது. தற்போது நிலவும் கடும் வரட்சியின் வெப்பத்தினாலும், திடீரெனப் பெய்யும் மழையினாலும் கோழிகளுக்குப் பல நோய்கள் ஏற்பட்டுவருகின்றன.

இதனால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் கால்நடைவைத்தியர் பணிமனையினரும் இணைந்து தடுப்பூசிகளை ஏற்றி வருகின்றனர்.

கோழிகளுக்கான தடுப்பூசிகளை ஏற்ற இக்காலப்பகுதியில் மக்கள் முன்வரவேண்டும் என பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை வைத்தியரும் கேட்டுக்கொள்கின்றனர். (24)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் கிளிநொச்சியில் கணினியியல் கல்லூரி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இங்கிலாந்து அரசின் அங்கீகாரம் பெற்ற ஏசியன் கணினிக் கல்வியூட்டல் நிறுவனத்தால் கிளிநொச்சியில் கணினியியல் கல்லூரி கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மிகக்குறைந்த செலவில் வயது வேறுபாடின்றி அனைவரும் கணினி அறிவைப் பெறும் நோக்கில் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவோடு மாலை 3.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வில் பொதுச் சுடரினை ஏசியன் கல்வி நிலைய யாழ்.கிளைப் பணிப்பாளர் சுடரோன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பலகையினை அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த திலகராஜன் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து பயிற்சி நிலையத்தின் அலுவலகத்தினை சொட் நிறுவனப் பணிப்பாளர் ரவி நாடாவை வெட்டித் திறந்துவைக்க, முதலாவது பயிற்சி மண்டபத்தினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து இரண்டாவது பயிற்சி மண்டபத்தினை சுடரோனும், மூன்றாவது மண்டபத்தை வாகீஸ்வரனும் திறந்து வைத்தனர். அடுத்து நிகழ்வின் வரவேற்புரையினை நிலையக் கணினி ஆசிரியை ராதிகா நிகழ்த்த, ஆசியுரைகளை வெளிநாட்டிலிருந்து வருகை தந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதியும், யாழ்.






பணிப்பாளர் வின்சன், அவுஸ்திரேலியத் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த வாகீஸ்வரன், லண்டன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த ராககோபால் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். பயிற்சி நிலையத்தின் பெயர்ப் ஏசியன் கணினிப்பயிற்சி நிலையப்பணிப்பாளரும் நிகழ்த்தினர். சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்த நன்றியுரையினை மகிந்தன் வழங்கினார். இந்நிகழ்வில் அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், போராளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

# முல்லை மத்திய கடற்கரையில் உருவாகும் சுற்றுலா மையத்தைப் பேண வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)


முல்லை நகரின் எழிலை மேம்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மத்திய கடற்கரையில் அமைக்கப் பட்டுவரும் சுற்றுலா மையத்தின் அழகை மாசுபடுத்தும் வகையில் எவரும் செயற்பட வேண்டாமென முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பேராளர் மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகப் போரின் கொடும் தாக்கங்களுக்குள் வாழ்ந்து வந்த எமது மக்கள் அதிலிருந்து விடுபட்டு மகிழ்வாகத் தமது வாழ்வை நகர்த்தும் முகமாக அமைக்கப்பட்டு வரும் சுற்றுலா மையத்தைச் சுத்தமாகவைத்திருக்க வேண்டியது எமது பொறுப்பு; எனவே அதனை அசுத்தப்படுத்தாது சுத்தமாக வைத்திருக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும்.

அண்மையில் அமைக்கப்பட்ட சுற்றுலாமையம் படிப்படியாகப் புதுப்பொலிவு பெற்று வருகிறது. இப்போது நாளுக்கு நாள் சுற்றுலா மையத்தை பயன்படுத்துபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. இது சுற்றுலாமையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதுடன் அதனை மேலும் சிறப்பான முறையில் உருப்பெறவைக்க வேண்டியதையும் உணர்த்துகிறது. முல்லை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் ச[illegible]ங்களின் சமாசத்தால் அமைக்கப்பட்ட இந்த மையத்தை நாம் அனைவரும் சுத்தமாக வைத்திருந்து, அதன் வளர்ச்சிக்காக உழைக்கவேண்டும் எனவும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டிருந்தது. (லோ.தீ)

# பிரதானவீதி புனரமைப்பில் வடிகால் அமைப்பும் அவசியம்

முள்ளியவளைப் பிரதேச பிரதானவீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்ற போதிலும், வீதிக்கான வடிகால்கள் மற்றும் மதகுகள் அமைக்காமையினால், தற்போது பெய்துவரும் மழையால் பெருவெள்ளம் வீதிகளை மூடி அரித்துப் பாய்வதுடன், வர்த்தக நிலையங்களுக்குள்ளும், முள்ளியவளைப் பொதுச்சந்தைக்குள்ளும் புகுந்து பாரிய நஷ்டங்களை ஏற்படுத்தி வருகின்றது.இதேவேளை மழை வெள்ளம் முள்ளியவளைச் சந்தி, அம்மன்சந்தி வீதியை மூடி வற்றாப்பளை பிரதான வீதியை அரித்துப் பாய்வதால் வற்றாப்பளை பிரதானவீதி பாரிய அறுத்தோடிக் கிடங்காகவும், பாரிய குழிகளாகவும் உள்ளதால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் ஏனையோரும் அவலப்படுவதுடன் துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டிகள் வீழ்ந்து ஓட்டுனர்கள் காயப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (ஆ)



கிளி. வட்டக்கச்சி பொதுச் சந்தையடிப்பகுதியில் போரினாலும், வேறு சம்பவங்களிலும் கொல்லப்பட்ட முப்பத்திரண்டு பொது மக்களின் ஞாபகார்த்தமாக நினைவுத் தூபியொன்று தேசிய எழுச்சிப் பேரவையால் அரசியல் துறையின் ஒழுங்குபடுத்தலில் அமைக்கப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம். (படம்.ரூபன்)

# துப்பாக்கிச் சூட்டில் காயம்

மட்டக்களப்பு ஏறாவூர் சவுக்கடிப் பிரதேசத்தில் சனிக்கிழமை நண்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் 26 வயது மீன் வியாபாரியொருவர் காயமடைந்து, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கச்சு மொகமது அன்சார் என்ற இந்த மீன் வியாபாரி மீன் கொள்வனவிற்காக தனது சகாவுடன் ஈருருளியில் சென்று கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. வலது கையில் காயமடைந்த அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவர் 9 எம்.எம் ரக பிஸ்டலொன்றி னாலேயே சுடப்பட்டுள்ளதாகக் கூறும் பொலிசார், இதற்கானகாரணம் தெரியவில்லை என்றும் துப்பாக்கிதாரிகள் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். (32)

# வாகன விபத்துக்களைத் தடுப்பது பற்றி யாழ். நீதிபதி தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

**அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் மீண்டும் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விசேட கூட்டமொன்று யாழ். நீதிமன்றில் நீதிபதி விக்கினராஜா தலைமையில் இடம்பெற்றது.**

யாழ். நீதவான் இ.த.விக்கின ராஜா மற்றும் மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபை, சிற்றூர்தி உரிமையாளர் சங்கம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் யாழ். மாநகர சபை அதிகாரிகளுடன் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த ஓரிரு மாதங்களிற்கு முன்னர் இவ் விடயம் தொடர்பாகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்துச் சமிக்ஞைகளைப் பொருத்துவதென எடுக்கப்பட்டிருந்த முடிவுகள் தொடர்பாகவும், மாற்று ஏற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டிருந்தது.

பிற்பகல் 2.00 மணி முதல் சுமார் 4.00 மணி நேரத்திற்கும் அதிகமான நேரம் இப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

-யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு

# தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்க ஜப்பான் அரசு இணக்கம்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்திகளுக்கு உதவுவதற்கென ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

அந்தவகையில் யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அறிவியல்சார் உதவிகளை வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் தொழில்நுட்ப அபிவிருத்தியை மையமாகக் கொண்டே ஜப்பான் இவ் உதவிகளை வழங்க முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# எழுதுமட்டுவாள் அ.த.க.பாடசாலையை சொந்த இடத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை

தென்மராட்சியின் முன்னரங்க இராணுவ நிலையப் பகுதியை அண்டியுள்ள எழுதுமட்டுவாள் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையினை மீளச் சொந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள இப்பாடசாலைக்கான புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதியொன்றினை அமைத்துக் கொடுக்கவும், யுத்தத்தினால் சேதமுற்றுள்ள வகுப்பறைகளைத் திருத்தி வழங்கவும் சுவிஸ் அரசு முன்வந்துள்ளது. சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் மேற்பார்வையில் இப்பணிகளை முன்னெடுக்கக் கல்வித்திணைக்களம் முன்வந்துள்ளது.

இதனிடையே மேற்படி வகுப்பறையின் நிர்மாண வேலைகளுக்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொள்ள ஏதுவாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பாடசாலை வளவினுள் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கடுமையான சோதனையின் பின் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆயினும் பாடசாலையை அவ்விடத்தில் மீள இயக்க அனுமதிப்பது தொடர்பான எந்தவொரு முடிவினையும் படைத்தரப்பு இதுவரை வழங்கியிருக்கவில்லையெனவும் தொடர்புடைய தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையினையடுத்து இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்திருந்த நிலையில் மேற்படி பாடசாலைச் சூழல் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டதுடன், படையினர் பாடசாலைக் கட்டடங்களில் முகாமிட்டிருந்தனர். இதனையடுத்து இப் பாடசாலை மிருசுவில் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (27)

தென்மராட்சியில்

# மாணவருக்கு சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்த யுனிசெப் முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கடந்தகால யுத்தம் மற்றும் இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் ஏராளமானோர் போஷாக்கின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மாணவர்களது நலனைக் கவனத்திற் கொண்டே இச்சத்துணவுத்திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்), தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையூடாக மேற்கொண்டுள்ளது. (33)

# கவனிப்பாரற்ற நிலையிலுள்ள உரும்பிராய்-கோப்பாய்வீதி

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய்-கோப்பாய் வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது.

குன்றுகள், குழிகள் நிறைந்ததாகக் காணப்படும் இவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வீதியினது நிலை குறித்து மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இவ் ஆண்டில் முதல் 7 மாதங்களில் 3இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை தெரிவிக்கையில், கடந்த ஆண்டு இதே காலப் பகுதியை ஒப்பிடும் போது இலங்கைக்கு வந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதெனக் கூறியுள்ளது.

# "நிகொட்" நிதியுதவியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ். இருபாலையில் அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடன் யாழ். இருபாலை கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை மற்றும் இடம்பெயர்வு என்பவற்றால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேச மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டினைக் கவனத்தில் கொண்டே இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மேற்படி கிராமத்தில் கல்வி, சமூக, பொருளாதார, சுயதொழில் முயற்சி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (33)

# 4 பா.உறுப்பினர்களுக்கெதிராக ஐ.தே.க. தலைமை நடவடிக்கை

அரசாங்கம் பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றிய வரி மன்னிப்பு திருத்தச் சட்ட மூல வாக்கெடுப்பின் போது பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த நான்கு ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக கட்சியின் தலைமை தீர்மானித்திருப்பதாகக் கொழும்பின் அச்சு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட வாக்கெடுப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் மன்றில் இருந்து வெளியேறியிருந்தனர். எனினும் சஜித் பிரேமதாஸ, நவின் திஸநாயக்க, திலீபவெத்த ஆராட்சி, மற்றும் மேரி ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றில் இருந்து வெளியேறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கம் நிறைவேற்றிய வரி மன்னிப்புச் சட்டமூலத்திற்கு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வாக்களிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து கட்சியின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாகவும், இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படலாம என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தே. ஆணையர் கமரூனுக்குப் பயணம்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க இன்று கமரூன் நாட்டுக்கு விஜயம் செய்கிறார். நாட்டில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலைக் கண்காணிக்கும் பணியின் நிமித்தமே அவரின் விஜயம் இடம்பெறுகிறது. கமரூன் நாட்டில் எதிர்வரும் 11 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கெனப் பல நாடுகளில் இருந்தும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கமரூன் செல்கின்றனர்.

இதேவேளை தெற்காசியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்ந்ததாகக் கூறப்படும் உரிமை மீறல், மற்றும் பழிவாங்கல் சம்பவங்களை விசாரணை செய்ய இந்தியாவில் அலுவலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. பொதுநலவாய அமைப்பின் பாராளுமன்றத் தலைமையகம் இந்த அலுவலகத்தை அமைக்கவுள்ளது. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகழ்ந்ததாகக் கூறப்படும் அசௌகரியங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெறவுள்ளன.




எஸ்.பாலாவின் "தைமாதக் கனவுகள்" வீதிநாடகம் கிளிநொச்சியில் தற்போது காண்பிக்கப்பட்டு வருகின்றது. இவ்வீதி நாடகம் 1983ஆம் ஆண்டு மட்டக்களப்பு புல்லுமலைச் சம்பவத்தினை முற்று முழுதாக எடுத்துக்காட்டும் வகையில் மேடையேற்றப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (படம்:- சோதி, வரன்)



புதுக்குடியிருப்பில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் ஒருபகுதி வெள்ளத்தால் மூடியுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-தவரட்ணம்)



பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் மாணவர் வகுப்பறைக் கட்டடத்தின் கூரைகள் சிதைவடைந்துள்ள நிலையில் இருப்பதனையும், இதன் காரணமாக மாணவர்கள் தற்போது பெய்துவரும் மழை ஒழுக்குகளுக்கு மத்தியிலும் இவ்வகுப்பறையினுள் இருந்தே கல்வி கற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதனையும் படத்தில் காணலாம். (படம்:- சோதி,வரன்)

# நெருப்புக் காய்ச்சல் — TYPHOID FEVER

### 1.நெருப்புக் காய்ச்சல் என்றால் என்ன?

நெருப்புக் காய்ச்சல் ஒரு உயிருக்கு ஆபத்தான தொற்று நோயாகும். இந்த நோயைப் பரப்புவது சல்மனெல்லா ரைபி (Salmonella typhi) என்று சொல்லப்படும் ஓர் நுண்கிருமி.

**இந்த நோய்க்குரிய அறிகுறிகள்,**

*தொடர்ந்த காய்ச்சல்
*தலைவலி
*சோம்பல்
*சாப்பாட்டுக்கு விருப்பமின்மை
*இதயத்துடிப்புக் குறைதல்
*வயிற்றோட்டம் அல்லது மலச்சிக்கல்
*இருமல் என்பனவாகும்.

### 2.யாருக்கு நெருப்புக் காய்ச்சல் அதிகமாகத் தொற்றும்?

சல்மனெல்லா ரைபி என்ற நுண்கிருமி கூடுதலாகவுள்ள நீரைப்பருகுபவர்கள் அல்லது சாப்பாடுகளைச் சாப்பிடுபவர்கள் இந்த நோயினால் பீடிக்கப்படுவார்கள்.

### 3.நெருப்புக் காய்ச்சல் எப்படிப் பரப்பப்படுகின்றது?

நெருப்புக்காய்ச்சல் ஒரு தொற்று நோயாகும் ஆகையினால் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களினால் கையாண்ட உணவுப்பொருட்களையோ அல்லது குடிபானங்களையோ உட்கொள்வதனால் உங்களுக்கு நெருப்புக் காய்ச்சல் வரலாம். அல்லது நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களது கழிவுப்பொருட்கள் (முக்கியமாக மலம்) நீரில் கலப்பதினால் இந்த நீரில் நோயைப்பரப்பும் நுண்கிருமிகள் கூடுதலாக இருக்கும். இந்த நீரைக் குடிப்பதனாலும் அல்லது உணவுப்பொருட்களை இந்த நீரினால் கழுவுவதாலும் இந்தக் கிருமியின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

### 4.இந்தக் கிருமி தொற்றிக்கொண்டபின் எவ்வளவு காலத்திற்குப் பின்பு நோயின் அறிகுறிகள் தோன்றலாம்?

இந்த நோய்க்கிருமிகள் கூடுதலாகவுள்ள குடிநீரைக் குடித்தோ அல்லது சாப்பாடுகளைச் சாப்பிட்டோ 3நாள் முதல் 3மாதம் வரைக்குள்ளான காலங்களில் இந்த நோய்க்கான அறிகுறிகள் தோன்றலாம். அநேகமாக 1கிழமை முதல் 3கிழமைக்குள் நோயின் அறிகுறிகள் தோன்றுவதற்குச் சாத்தியமுண்டு.

### 5.எப்படி நெருப்புக்காய்ச்சலை உறுதிப்படுத்துவது? (அல்லது அனுமானிப்பது)

சலமனெல்லா ரைபி என்னும் கிருமியை இரத்தத்திலிருந்தோ அல்லது மலத்திலிருந்தோ வேறுபடுத்துவதனால் நெருப்புக் காய்ச்சலை உறுதிப்படுத்தலாம்.

### 6.நெருப்புக்காய்ச்சலை எப்படிக் குணப்படுத்தலாம்?

அன்ரிபயோட்டிக் (நுண்ணுயிர்க் கொல்லிகள்) என்னும் மாற்றுமருந்தைப் பாவிப்பதனால் இந்நோயைக் குணப்படுத்திக்கொள்ளலாம். பொதுவாக இந்த மாற்றுமருந்தைப் பாவிக்கத் தொடங்கி 2-3 நாட்களில் இந் நோயின் அறிகுறிகள் மறையத் தொடங்கும் இந்நோயினால் இறப்பு வருவது சரியான குறைவு. இருந்தாலும் நோயாளி மாற்றுக் குளிசையைப் பாவிக்காவிட்டால் நெருப்புக் காய்ச்சல் பல கிழமைகள் அல்லது மாதங்களாகத் தொடர்ந்து இருக்கும். 20 வீதமான நோயாளிகள் இந்நோய்களின் சிக்கல்களினால் இறக்க நேரிடலாம்.

### நெருப்புக்காய்ச்சல் வந்தவர்கள் முக்கியமாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை என்னவென்றால்.....

உங்களது நோயினுடைய அறிகுறிகள் இல்லாமல் போய்விட்டாலும், நீங்கள் இந் நோயினுடைய கிருமியைக் காவிக்கொண்டு திரிகின்றீர்கள். அதனால் இந்நோய் உங்களுக்குத் திரும்பவும் வரலாம். அல்லது இந்நோயை நீங்கள் மற்றவர்களுக்குப் பரப்பலாம். ஆகவே நீங்கள் உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கும் இடங்களில் வேலை செய்பவர்களாக இருந்தாலோ அல்லது சின்னப்பிள்ளைகளைப் பராமரிக்கும் இடங்களில் வேலை செய்பவர்களாக இருந்தாலோ, உங்களது வைத்தியர் நீங்கள் இந் நோய்க் கிருமிகளில் இருந்து முற்றாக மாறிவிட்டீர்கள் என்று சொல்லும் மட்டும் நீங்கள் வேலைக்குச் செல்லாமல் இருப்பதற்கு அனுமதி எடுத்துக்கொள்ளலாம்.

### நீங்கள் நெருப்புக் காய்ச்சலுக்கு மருத்துவம் செய்யும் பொழுது முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை........

*. அன்ரிபயோட்டிக் (நுண்ணுயிர்க் கொல்லிகள்) எனும் மாற்றுக்குளிசையை உங்கள் வைத்தியர் சொல்லியபடி எடுக்க வேண்டும்.

*. மலசலகூடத்தைப் பாவிக்க வேண்டும். இல்லாதவிடத்து வெட்டிப் புதைக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் மலம்,சலம் கழித்தபின் கைகளை நன்றாகச் சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

*.உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்பதையோ அல்லது பரிமாறுவதையோ தவிர்க்க வேண்டும்.

*. உங்களது வைத்தியர் உங்களது மலத்தை பரிசோதனை செய்து இக் கிருமி உங்களது உடம்பில் இல்லை என்று உறுதி செய்திருத்தல் வேண்டும்.

### எப்படி நெருப்புக்காய்ச்சல் வராமல் தடுக்கலாம்.

நெருப்புக்காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு 2முறைகள் உள்ளன.

*.கிருமிகள் உள்ள உணவுப்பதார்த்தங்களை உட்கொள்வதையோ அல்லது நீரைக்குடிப்பதையோ தவிர்க்கவும்.

*நெருப்புக்காய்ச்சலுக்குள்ள தடுப்பு மருந்தைப் போடுவதானால் இரண்டு விதமான தடுப்பு மருந்துகள் உள்ளன.

1. ஊசி போடுவது
2. வாய் மூலமாக மாத்திரை உட்கொள்வது

நீங்கள் உங்கள் வைத்தியரை அணுகி இந்தத் தடுப்பு மருந்து பற்றிய ஆலோசனைகளைப் பெறலாம். நீங்கள் தடுப்பு மருந்தை எடுத்திருந்தாலும், நீங்கள் சாப்பிடும் போதோ, குடிபானம் குடிக்கும் போதோ கவனமாக இருக்க வேண்டும். தடுப்பு மருந்துகள் 100 வீதம் பயனளிக்கமாட்டாது. நீங்கள் சாப்பிடும் போதும், குடிபானங்கள் குடிக்கும் போதும் கவனமாக இருந்தால் நெருப்புக்காய்ச்சல் மட்டுமல்ல வாந்திபேதி, வயிற்றுளைவு, செங்கண்மாரி என்ற வருத்தங்களில் இருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

### நீங்கள் நெருப்புக் காய்ச்சல் கூடுதலாக உள்ள இடங்களிற்கு பிரயாணம் செய்யும் பொழுது பின் வருவனவற்றை முக்கியமாகக் கவனிக்கவும்.

*. குடிக்கும் நீரை நன்றாகக் கொதித்து ஆறவைத்துக் குடிக்கவும், அல்லது பாதுகாப்பான நீர்ப்போத்தல் வாங்கிக் குடிக்கவும்.

*.ஐஸ்பழம், ஐஸ்கிறீம் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

*. நன்றாகச் சமைத்த, சூடாக உள்ள உணவுகளைச் சாப்பிடவும்.

*.சமைக்காத காய்கறிகள், தோல் உரிக்காதவையாக இருந்தால் நீங்கள் தோல் உரித்துச் சாப்பிடவும், தோல் உரிக்காத சாப்பாடுகளைச் சாப்பிட வேண்டாம். எப்பொழுதும் கையை நன்றாகச் சவர்க்காரம் போட்டுக் கழுவவும்.

*. தோல் நீக்க முடியாத பழங்களையோ, சமைக்கப்படாத காய் கறிகளையோ சாப்பிட வேண்டாம்.

*. வீதிகளில் விற்கப்படும் சாப்பாடுகளையோ, குளிர் பானங்களையோ, உட்கொள்வதைத் தவிர்க்கவும். வீதிகளில் விற்கப்படும் உணவுகளைச், சுத்தமாக வைத்திருப்பது கஷ்ரம், அநேகமாக பிரயாணிகள் வீதிகளில் விற்கும் உணவுப் பதார்த்தங்களைச் சாப்பிடுவதனால் நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.

### நோயைத் தடுப்பதற்கு இலகுவான விதிமுறை

நீரை நன்றாகக் கொதிக்க வைக்கவும், நன்றாகச் சமைக்கவும், மரக்கறிவகை, பழவகை ஆகியவற்றின் தோலை உரிக்கவும், இல்லையென்றால் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**தமிழீழ சுகாதார சேவைகள்**

## எரிபொருள் விலையதிகரிப்பை எதிர்த்து தனியார் சிற்றூர்திகள் சேவைப் புறக்கணிப்பு

### -இன்று முதல் ஆரம்பமாகும்

(கொழும்பு)

தென்பகுதித் தனியார் சிற்றூர்திகள் இன்று நள்ளிரவு முதல் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. டீசல் மற்றும் பெற்றோலின் விலை மீண்டும் ஒரு முறை அதிகரிக்கப்பட்டதை அடுத்து தமது பயணிகள் சிற்றூர்ந்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவேண்டும் எனக் கோரியே இந்த சேவைப் புறக்கணிப்பு நடைபெறவுள்ளது. ஏற்கனவே கடந்த இரண்டு கிழமைகளுக்கு முன்னர் டீசலின் விலை அதிகரித்ததையடுத்து தனியார் சிற்றூர்திகளின் கட்டணங்கள் 9 வீதத்தால் அதிகரிக்கப்பட்டன. தற்சமயம் டீசலில் ஏற்படுத்தப்பட்டுள்ள விலை அதிகரிப்பையடுத்து 15 வீதத்தால் சிற்றூர்திக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தனியார் சிற்றூர்திகளின் உரிமையாளர்கள் கோருகின்றனர். சனிக்கிழமை முதலே பெரும்பாலான வீதிகளிலிருந்து தனியார் சிற்றூர்திகள் தமது சேவையை இடைநிறுத்தியுள்ளன. இலங்கையின் பயணிகள் போக்குவரத்தில் நூற்றுக்கு 80 வீதமானவை தனியார் சிற்றூர்திகள் என்பது குறிப்பிடத்தக்கது . (32)

## அமெரிக்காவில் அமைச்சர்களுக்கும் ஆடம்பர விருந்தகம்

(கொழும்பு)

நாட்டில் மக்கள் பெரும் பொருளாதாரச் சிக்கலுக்குள் இருக்கும் போது சனாதிபதி அண்மையில் அமெரிக்காவின் நியூயோர்கிற்குச் சென்றிருந்த போது அங்கு மிகவும் அதிகமான பணத்தைச் செலுத்தக் கூடிய விருந்தகம் ஒன்றில் தங்கியிருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே குற்றம் சுமத்தியிருந்தது. இந்த நிலையில் சனாதிபதி, அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க மற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் தங்கியிருந்த விருந்தகத்தில் ஒரு நாள் தங்குவதற்கு மட்டுமான செலவு இலங்கை ரூபாவில் 75 ஆயிரம் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவிலேயே அதிக பணச்செலவுடன் கூடிய விருந்தகம் இதுவெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## 17 வெளிநாட்டினர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கையின் ஊடாக இத்தாலிக்குச் செல்ல முயன்ற 17 பங்களாதேஷ் நாட்டினரை நேற்று முன்தினம் கல்கிஸ்ஸ பொலிசார் கைது செய்துள்ளனர். ஏற்கனவே இவ்வாறான நோக்கத்தில் வெள்ளவத்தைப் பகுதியில் தங்கியிருந்த 62 பங்களாதேஷ் பிரஜைகள் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நாடு கடத்தப்படவுள்ளனர். (32)

## புராதன குளத்தைப் புனரமைக்க தற்போதைய ஆட்சியாளர் மறுப்பு

### -ஐ.தே.க.தரப்பில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

குருநாகல் பகுதியில் உள்ள புராதன குளத்தைத் தமது ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தி செய்யத் திட்டமிட்ட போதும் அந்த அபிவிருத்தி தற்போதைய அரசாங்கத்தால் கைவிடப்பட்டுள்ளதாக அந்த மாவட்டத்தின் ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா மற்றும் நகரசபைத் தலைவர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வடக்கின் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கின் மட்டக்களப்பு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படக்கூடிய நீர் வளத்தினைக் கொண்டுள்ள இந்தக் குளத்தில் ஒருவித வைரஸ் இருப்பதாகவும் அதுபற்றி ஒஸ்ரீரிய பல்கலைக்கழகத்தின் பரிசோதனைக்குக் குளத்தின் நீர் அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தனர். தற்போது நாடு எதிர் நோக்கும் குடிநீர்ப் பிரச்சினைக்கு இந்தக் குளத்தின் அபிவிருத்தி மூலம் ஓரளவு தீர்வு காணப்பட முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. (32)

## சிறிலங்காவின் வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி 5 மாதங்களில் 376 மில்லியன் டொலர்களால் வீழ்ச்சி

(கொழும்பு)

சிறிலங்காவில் வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 5 மாத காலத்தில் மாத்திரம் சுமார் 376 மில்லியன் டொலர்களால் வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் சிறிலங்காவில் இருந்த வெளிநாட்டுச் சொத்துக்களின் பெறுமதி 2329 மில்லியன் அமெரிக்கன் டொலர்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவில் அபிவிருத்தியின்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியின்மையின் கீழ் அதிக கடனையும் வட்டியையும் வெளிநாடுகளுக்குச் செலுத்துவதே இதற்கான காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் சிறிலங்காவில் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இறுக்க நிலையானது நாட்டில் பாரிய அளவில் பணவீக்க நிலையை ஏற்படுத்தும் என பொருளியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (32)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# கை நழுவிப் போன வாய்ப்பு

இவ் வருடத்தில் கிரிக்கெட் உலகம் மறக்கமுடியாத போட்டி ஒன்று கடந்த 25.09.2004 அன்று நடந்தேறியது.

ஐ.சி.சி சம்பியன் கோப்பைக்கான இறுதியாட்டத்தில் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையிலான மோதலே அது.

கிரிக்கெட் பாரம்பரியம் மிகுந்த இரு நாடுகளும் கடந்துபல ஆண்டுகளாக ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஒதுக்கப்பட்டுத் தோல்விகளையே சுவைத்துவந்தநிலையில் இரு அணிகளும் புதிய பரிமாணத்தை எட்டியுள்ளன.

இதன் முதல் அத்தியாயமாக இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

கிரிக்கெட் போட்டியைப் பொறுத்த வரையில் ஒரு அணி சிறப்பாக ஆடி வெற்றி மேல் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தாலும், இறுதிப் போட்டியில் அவ் அணி வழக்கத்திற்கு மாறான நெருக்கடியை எதிர்கொள்வது வழமை. அந்த நெருக்கடி ஐசிசி மினி உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்டது.

பலமான அவுஸ்திரேலிய அணியை அரையிறுதிப்போட்டியில் இலகுவாகத் தோற்கடித்த இங்கிலாந்து இறுதிப்போட்டியில் மேற்கிந்தியத்தீவை வெற்றி கொண்டு கிண்ணத்தைச் சுவீகரிக்கும் என்ற தோற்றப்பாட்டை 80 சதவீதம் ஏற்படுத்தியிருந்தது.




ஏனெனில், சொந்த மண்ணிலும், மேற்கிந்திய மண்ணிலும் டெஸ்ட் தொடரை அவ் அணிக்கு எதிராகக் கைப்பற்றிய இங்கிலாந்து, கிண்ணத்தையும் கைப்பற்றி விடும் என உறுதியாகக் கூறப்பட்டது.

அத்தனைக்கும் ஊகங்களும், கணிப்புக்களும் இங்கிலாந்து அணிக்குச் சாதகமாக இருந்ததுடன் வெற்றிக்குரிய அணியாகவும் காணப்பட்டது.

ரெஸ்கொதிக், அன்ருபிளின்டொப், சோலங்கி, அன்ரூஸ் ராஸ், கொலிங்வூட் என எதிரணியை அச்சுறுத்தும் வீரர்கள் வரிசை அவ்வணிக்குச் சாதகமாக அமைந்திருந்தது..

கிரிக்கெட்டில் எதையும் கணிக்கவே முடியாது கணிப்புகளையும் தாண்டி முடிவுகள் கிடைக்கும். அதற்கு எடுத்துக்காட்டாக மேற்கிந்தியத் தீவின் வெற்றி அமைந்து விட்டது. வெற்றி பெறும் என கடைசிவரை எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து அணி கடைசி நேரப்பரபரப்பில் பரிதாபமாகக் கோப்பையை லாறாவிடம் பறிகொடுத்தது.

இங்கிலாந்திடம் இருந்த வெற்றி வாய்ப்பை பிரட்ஷா-பிரவுன் இணை பிரமாதமாகத் திசைதிருப்பி முதல் முறையாக மேற்கிந்தியத் தீவுக்கு ஐ.சி.சி கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்ததுடன் தமது அணியின் பலத்தை மீண்டும் நிருபித்தனர்.




வெற்றியின் நாயகர்கள்...

ஒன்பதாவது விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து 71ஓட்டங்களைக் குவித்து வெற்றியை உறுதி செய்தனர்.

இதனால் கிரிக்கெட்டைப் பிரசவித்த இங்கிலாந்துக்கு ஒரு நாள் கிரிக்கெட்டின் முக்கிய போட்டி ஒன்றில் சம்பியனாகும் அருமையான வாய்ப்பும் கைநழுவிப் போனது.

---

# இரண்டாவது வீரரானார் இன்சமாம்

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆவார். அவர் தற்போது காயம் காரணமாக ஐ.சி.சி போட்டிகளை இழந்துள்ளார். 339 போட்டிகளில் அவர் 13, 415 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரது சராசரி 45.01 ஆகும்.

அதற்கடுத்தபடியாக 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவராக பாகிஸ்தானின் இன்சமாம்-உல்ஹக் திகழ்கிறார். ஐ.சி.சி கிண்ணத்தொடரில் இந்தியாவுடனான போட்டியில் அவர் 23 ஓட்டங்களைப் பெற்ற போது அவர் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். அவரது சராசரி 38.97 ஆகும்.

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் முல்டானில் பிறந்த அவர் 1991ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான போட்டியில் பங்கேற்றதுடன் கிரிக்கெட் உலகில் பிரவேசித்தார். 1992 பேர்மிங்காம் நகரில் இங்கிலாந்துடன் தனது டெஸ்ட் போட்டியை ஆரம் பித்து இன்று வரை 94 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 68 99 ஓட்டீங்களைப் பெற்றுள்ளார்.

1992ஆம் ஆண்டு தனது பிறந்த ஊரான முல்டானில் சிறிலங்காவுடனான ஒரு நாள் போட்டியில் தனது முதலாவது சதத்தைப் பெற்றார். முதலாவது டெஸ்ட் சதத்தை அன்டிகுவாவில் மேற்கிந்தியத்தீவுகளுடனான போட்டியில் பெற்றுக் கொண்டார்.

1992 ஆம் ஆண்டு பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய வேளை இறுதிப் போட்டியில் இவர் 35 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

துடுப்பாட்ட வீரர்கள் ஒரு காலம் எழுச்சி பெறுவதும், ஒரு போது வீழ்ச்சியுறுவதும் இயற்கையே. அதற்கேற்ப 1997ஆம் ஆண்டு முதல் இவரின் துடுப்பாட்டம் வீழ்ச்சிகண்டது 1997 இல் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் 6 போட்டிகளில் இவர் 438 ஓட்டங்களையே பெற்றார்.

1998இல் 14 இனிங்ஸ்களில் 231 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். பின்னர் படிப்படியாக வளர்ந்து இரண்டாவது இடத்தைப பிடித்துள்ளார்.

இன்சமாமை மென்மையான கரங்களைக் கொண்ட பலசாலி எனக் கிரிக்கெட் நிபுணர்கள் கூறுகின்றனர். இவர் பிறந்த இடமான முல்டான் நகரிலேயே நாளை மறுதினம் முக்கோணத் தொடர் ஆரம்பமாகவிருக்கிறது.




வடிவேல்

---

# எழுச்சி கொண்ட ரஷ்யா

டென்னிஸ் உலகம் இப்போது கணிசமாக மாறிவிட்டது. அமெரிக்காவின் பிடி முற்றிலுமாகத் தளர்ந்து விட, ரஷ்யா 'வல்லரசாக' வளர்ச்சி கண்டுள்ளது. ஆம் 2004இல் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை ரஷ்ய வீராங்கனைகளே சொந்தமாக்கியுள்ளனர். ஆண்கள் பக்கம் திரும்பினால், எங்கு பார்த்தாலும் பெடரர் அலை. சுவிற்சர்லாந்து நாட்டுக்காரரான இவர் தனி மனிதராக, மொத்தம் உள்ள நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்றில் (ஆஸி, விம்பிள்டன், யு.எஸ், ஓபன்) சம்பியனாகிச் சாதித்துள்ளார்.

ரஷ்யா, ஒன்றுபட்ட சோவியத் யூனியனாக இருந்தபோது டென்னிசுக்கு முக்கியத்துவமே இல்லை. அப்போதெல்லாம் கம்யூனிச அடிபபடையில் 'அணி' விளையாட்டுகளுக்கே மவுசு அதிகம். டென்னிஸ் தனிநபர் போட்டி என்பதால் 'ஒற்றுமை உணர்வு' இல்லை என்று கூறி ஓரங்கட்டப்பட்டது. இதனால் மிகச்சிலரே டென்னிசில் பிரகாசித்தனர். 1974 இல் பிரெஞ்ச் ஓபனில் மொரசோவா அமெரிக்காவின் கிறிஸ் எவர்ட்டிடம் இறுதிப்போட்டியில் தோற்றார். 1988இல் நதாஷா செவரிவா பிரெஞ்ச் ஓபனில் ஸ்டெபிகிராபிடம் கோப்பையைப் பறிகொடுக்க, இனி சோவியத் யூனியன் டென்னிசில் தேறாது என்று முடிவு கட்டப்பட்டது.





மிஸ்கினா

1991 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் டென்னிஸ் விளையாட்டுக்குப் புத்துயிர் அளித்தது. கம்யூனிசப் போர்வை மறைந்தது, சனநாயகம் மலர்ந்தது... ரஷ்யா தனி நாடானது. இந்தச் சனநாயக மலர்ச்சி மற்றும் முன்னாள் அதிபர் எல்ட்சின் 'டென்னிஸ் பிரியராக' இருந்தது போன்றவை வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டியது. ஆனாலும் பெண்கள் பிரிவில் பெரிதாக முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆண்கள் பிரிவில் 1999 இல் யெவ்ஜெனி கபல்னிகோவ் பிரெஞ்ச் ஓபனில் பட்டம் வென்றார். அடுத்து, 1999இல் அவுஸ்திரேலியன் ஓபனில் கோப்பையை வென்ற இவர் 2000- சிட்னி ஒலிம்பிக்கில் தங்கம் வென்று சாதித்தார். 2000 இல் நடந்த யு.எஸ். ஓபனில் மாரத்சாபின், அமெரிக்காவின் பீட்சாம்ப்ராசை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். தவிர 2002 இல் ரஷ்யா, டேவிஸ் கோப்பையை வெல்வதற்கும் இவர் முக்கிய காரணமாக இருந்தார்.

இப்படி ஆண்கள் சாதித்துக்கொண்டிருக்க, பெண்கள் பக்கம் அன்னா கோர்னிகோவா கவர்ச்சி காட்டிக்கொண்டிருந்தார். இவரால் சம்பியனாக முடியவில்லை. இந்தச் சூழலில் பெண்கள் டென்னிசை முன்னேற்ற உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ரஷ்யாவின் முக்கிய 44 நகரங்களில் 80 டென்னிஸ் அரங்குகள் தொடக்கப்பட்டன. இங்கு அதிகாலை முதல் நள்ளிரவு வரை கடினப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதில் பிரகாசிக்கும் வீராங்கனைகளை, வெளிநாடுகளுக்கு அனுப்பிச் சிறப்புப் பயிற்சி பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



ஷரபோவா

இதன் விளைவு.....2004இன் தொடக்கத்திலேயே தெரிந்தது. ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் கூட வெல்லாத ரஷ்யப் பெண்கள், இந்த ஆண்டு மூன்று பட்டங்களை வென்று ஒரு 'ரஷ்யப் புரட்சியை' ஏற்படுத்தியுள்ளனர். முதலில் பிரெஞ்ச் ஓபனில் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார் 22 வயதான மிஸ்கினா. அடுத்து 17 வயதான மரியா ஷரபோவா விம்பிள்டன் பட்டத்தைத் தட்டிச் சென்றார். இவர் அமெரிக்காவில் உள்ள 'புளோரிடா நிக் போலிட் டெயரி' அக்கடமியில் பயிற்சி பெற்றவர். இங்கு ஏழு வயதில் சேர்ந்த இவர் இப்போது ரஷ்ய மொழியைக் காட்டிலும் ஆங்கிலத்தையே சரளமாகப் பேசுகிறாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். "வெளிநாட்டில் பயிற்சி மட்டுமே. பிறப்பால் நான் ரஷ்யாவைச் சேர்ந்தவள். நான் பெறும் ஒவ்வொரு வெற்றியும் ரஷ்ய மண்ணுக்கே அர்ப்பணம்" என்கிறார் தாய்நாட்டுப் பாசம் மாறாத ஷரபோவா.

இப்படி உள்ளூர், வெளிநாடுகளில் கடினப் பயிற்சி மேற்கொண்ட ரஷ்ய வீராங்கனைகள் இன்று உலகின் பார்வையைத் தங்கள் பக்கம் இழுத்துள்ளனர். இவர்களது அடுத்த குறிக்கோள் மொஸ்கோவில் நடக்க உள்ள (வரும் நவ.24-28) பெடரேஷன் கோப்பையைக் கைப்பற்றுவதே. ஆக இந்த வெற்றி வீராங்கனைகள் அடுத்துச் சொந்த மண்ணிலும் சாதிக்கக் காத்திருக்கின்றனர்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 2043 – SRI (SF)

# கேள்வி அறிவித்தல் இல-33

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த (ICTAD) பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/CAARP/HS/03 | வவுனியா, செட்டிகுளம் மாவட்ட வைத்தியசாலை யில் நிர்வாகக் கட்டடம் மற்றும் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவு நிர்மாணம். | M5 (கட்டடங்கள்) | 140,000/= |
| 02 | AM/CAARP/HS/11 | அம்பாறை, திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலை யில் 40 படுக்கைகள் கொண்ட பெண்கள் விடுதி மற்றும் கட்டட திருத்தவேலைகள் நிர்மாணம். | M5 (கட்டடங்கள்) | 96,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்து திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி **026 – 2227434**, தொலைநகரி **026 –2227401**, மின்னஞ்சல் **necord@sltnet.lk**).

6. ஒப்பந்த ஆவணங்களை **2004** புரட்டாதி **24** இல் இருந்து 2004 ஐப்பசி மாதம் **08** ஆம் திகதி வரை முற்பகல் **9.30** மணியிலிருந்து பிற்பகல் **3.00** மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

7. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருப்பதுடன் 8 வது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, **NECORD, 140,** மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 ஐப்பசி மாதம் 8 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த. லங்காநேசன்,
கேள்விச்சபை தலைவர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்டம்,
140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

(சி-10415)

# குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாள் வேலை வழங்கும் திட்டம்

## இந்திய மத்திய அரசு மசோதா சமர்ப்பிக்க நடவடிக்கை

(புதுடில்லி)

**குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் கட்டாயமாக வேலை கொடுக்க வழி செய்யும் மசோதா இந்திய லோக்சபாவில் தயாராகி விட்டது. வருகிற பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச பொதுச் செயற்றிட்டத்தில் ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு ஆண்டுக்கு நூறு நாள் வேலை வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.**

அந்தத் திட்டத்தைச் செயற் படுத்த ஏற்கனவே மசோதா தயாராகி கடந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப் பட இருந்தது. ஆனால் தே.ஜ கூட்டணிக் கட்சிகள் பாராளுமன்றத் தைச் செயற்பட விடாமல் ரகளை செய்ததால் மசோதாவைத் தாக்கல் செய்ய முடியவில்லை. தவிர மசோதாவில் சில திருத்தங்களைச் செய்ய மார்க்சிய கம்யூனிஸ்டு உட்பட இடது சாரிக் கட்சிகள் யோசனை கூறியிருந்தன. காரணம் மேற்குவங்காளத்தில் கம்யூனிஸ்டு கூட்டணி அரசு 1978ஆம் ஆண்டே இதே போன்ற வேலை வாய்ப் புத்திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. ஆனால் அதை சரிவர அமுல் படுத்த முடியாததால் திட்டம் ரத்துச்செய்யப்பட்டது.

இத் திட்டத்திற்கு தகுதியான ஒருவர் வேலை கிடைக்காத பட்சத்தில் நீதிமன்றத்திற்குப் போனால் திட்டமே முடக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் இடது சாரிக் கட்சிகள் எச்சரித்து இருந்தன. அதைத்தொடர்ந்து அது போன்ற குறைபாடுகள் எல்லாம் அகற்றப் பட்டு வேலை வாய்ப்புத்திட்டத் துக்கான புதிய மசோதா தயா ரிக்கப்பட்டு விட்டது. அது வரவிருக் கின்ற பாராளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடரில் ஆக்கம் செய் யப்பட்டு நிறைவேற்றப்படும். அந்த மசோதாவில் கூறியிருப்பதாவது;

இந்தத் திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற் றுக்கொள்ளும். இந்தத் திட்டப்படி ஏழைக்குடும்பங்களில் வீட்டுக்கு ஒருவருக்கு ஆண்டுக்குக் குறைந்த பட்சம் 100 நாட்கள் சட்டபூர்வக் கூலியுடன் வேலை அளிக்கப்படும்.

தகுதியுள்ள ஒருவர் வேலை கேட்டு விண்ணப்பித்த 15 நாட்க ளுக்குள் அவருக்கு மாநில அரசு வேலைகொடுக்கவேண்டும். அப்படி வழங்க முடியாவிட்டால் அவருக்கு வேலையில்லா அலவுண்சாக மாநில அரசு தினக்கூலி வழங்கவேண்டும். வேலைசெய்யத் தொடங்கி ஏழு நாளில் அவர்களது கூலியை அரசு கொடுத்துவிட வேண்டும். இதற்கு மாநில அரசுகள் சட்ட விதிகளில் தேவையான திருத்தம் செய்து ஒவ்வொரு ஏழைக்குடும்பத்திலும் ஒருவருக்கு 100 நாளுக்கு குறை யாத அளவில் வேலை அளிப்ப தற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும். இந்தத் திட்டத்தை 100 நாட்களுக்கு மேல் வேலை அளிக்கும் வகையில் இந்தியா முழுவதும் விரிவுபடுத்த லாம். இந்த வேலைவாய்ப்புத் திட்டம் முறையாக செயற்படுத்தப் படுகிறதா என்பதை கண்காணிக்க மத்திய வேலைவாய்ப்பு உத்தர வாதக்குழு என்ற அமைப்பை மத் திய அரசு உருவாக்கும்.

இதன் தலைவர், உறுப்பினர், செய லாளர், மற்ற உறுப்பினர்களை மத் தியஅரசு நியமிக்கும். இந்தக் குழுவில் மத்திய அரசின் பல்வேறு அம்சங்கள் திட்டக்கமிசன் மாநில அரசுகள், தொழிலாளர் அமைப் புகள், பயனடையாத வகுப்பினர் போன்ற வற்றிலிருந்து உறுப்பினர் கள் நியமிக்கப்படுவார்கள்.

உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாகவும், அதே அளவு எண்ணிக்கையில் தாழ்த்தப் பட்ட மலைச் சாதியினரும் இடம் பெறுவார்கள் மற்ற சிறுபான்மை பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித் துவம் அளிக்கப்படும். இந்தக்குழு வில் வேலைவாய்ப்புத் திட்டத்தை செயற்படுத்த கண்காணித்து அவ் வப்போது தேவையான ஆலோச னைகளை மத்திய அரசுக்கு வழங்கும் இந்தத் திட்டம் பற்றி விரிவான பிரசாரமும் மேற்கொள் ளும் இந்தக் குழுவில் வேலை வாய்ப்புத் திட்டம் செயற்படுத்தப் படும் முறையை மதிப்பீடு செய்து கிராமப்புற பொருளாதாரம் பற்றிய புள்ளிவிபரங்களையும் சேகரிக்கும். இவ்வாறு மசோதாவில் கூறப்பட் டுள்ளது.

இந்தத்திட்டத்தைக் கண்காணிக் கும் மத்திய வேலை வாய்ப்பு உத்தரவாதக்குழுவின் தலைவராக பிரபல பொருளாதார மேதை அர்ஜுன சென்குப்தா நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.



நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த பாகிஸ்தானிய அதிபர் பர்வே முஷாரப் எதிர்பாராத விதமாக அவருக்குப் பிறந்த நாட் பரிசை வழங்கிக் கௌரவித்தார்.

# சோனியாவைப் பிரதமராக ஏற்க தேசியவாத காங்கிரஸ் தயார்

## தலைவர் சரத்பவார் அறிவிப்பு

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியைப் பிரதமராக ஏற்றுக்கொள்வதற்கு தயார் என்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மத்திய உணவு மற்றும் வேளாண் துறையமைச் சருமான சரத்பவார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் மகாராஷ்டிர மாநிலம் தானையில் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் பிரதமர் பதவியை ஏற்க மறுத்த தன் மூலம் சோனியாகாந்தி மிகப்பெரிய தியாகத்தைப் செய்துள்ளா ரென் றும், காங்கிரஸ் கட்சியின் பாரம் பரியத்தைப் பாதுகாத்துள்ளாரென் றும் அவர் கூறினார். பதவியை நிராகரித்ததன் மூலம் கட்சியின் ஒற்றுமை, முன்னேற்றத்தைக் கடைப்பிடிக்க ஜவகர்லால் நேரு, லால்பகதுர்சாஸ்திரி, இந்திரா காந்தி போன்ற தலைவர்கள் செயற்பட்டதோடு சோனியாகாந் தியும் தனது பங்களிப்பைச் செய் துள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங் களை முந்தைய தேசிய சனநாயகக் கூட்டணி அரசு அனுமதித்ததால் 50 சதவீதமளவிற்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயிகளுக்குக் குறைந்த வட்டி யில் கடன் பெறுவதற்கு வசதி யாக 86ஆயிரம் கோடி ரூபா கடன் திட்டத்தைப் பெற மத்தியரசு அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாஜ்பாய் ஆட்சியில் 10ஆயிரம் கோடி ரூபா ஊழல்

## இந்.மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் குற்றச்சாட்டு

அரச நிலத்தை ஆர்.எஸ்.எஸ். சுக்கு தாரை வார்த்ததில், வாஜ்ப் பாய் ஆட்சியில் ரூ.10 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது என்று மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார். மத்திய நகர்ப்புற மேம்பாடு மற்றும் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது; "தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போது பல் வேறு ஊழல்கள் நடந்துள்ளன. அது பற்றி எங்கள் ஐக்கிய முற்போக்கு அரசு விசாரணை நடத் தும். இந்தப் பிரச்சினையை காங் கிரஸ் கட்சி பாராளுமன்றத்திலும் எழுப்பியுள்ளது. முந்தைய வாஜ்பாய் ஆட்சி, டில்லியில் அரசு நிலத்தில் இருந்த ரூ.3500 கோடி மதிப்புள்ள 1025 மத்திய பொதுப்பணித்துறைக்குச் சொந்த மான கட்டடங்கள் மற்றும் வீடு களை இடித்துள்ளது. அந்த நிலத்தை ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங்பரிவார் அமைப்புக்களுக்கு பிரித்து கொடுத்துள்ளது. அந்த நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10ஆயிரம் கோடிகளுக் கும் அதிகமாகும் எங்களது ஐக் கிய முற்போக்குக் கூட்டணி அர சில் உள்ள சில மந்திரிகள் மீது பா.ஜ.வினர் ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்துகிறார்கள். இவர்கள் ஆட்சியில் இருந்த போது நடந்த ஊழலுடன் ஒப்பிட்டால் இந்த குற் றச்சாட்டு வேர்க்கடலைக்கு சமமான சிறிய குற்றச்சாட்டு ஆகும்.

தாங்கள் செய்த ஊழல்கள் வெட்டவெளிச்சமாகிவிடும் என்ப தால்தான் பா.ஜ.வினர் பாராளுமன் றத்தை நடத்தவிடாமல் அமளி செய்கிறார்கள் பா.ஜ.வினர். எங்கள் அரசில் உள்ள மந்திரிகள் மீது குற்றம்சாட்டுவது திருடன் மற்ற வர்களை திருடன் என்று குறிப் பிடுவது போல இருக்கிறது.

பா.ஜ. ஆட்சியில் நடந்த ஊழல் கள் பற்றி ஐக்கிய முற்போக்கு அரசின் மந்திரிகள் பழைய கோவை களைத் திறந்து ஆராய வேண்டும் பாபர் மசூதியை உடைத்தவர்கள் மீதுள்ள கறையை விட ஊழல் குற்றச்சாட்டு உள்ள மந்திரிகள் மீதுள்ள கறை பெரியகறையல்ல இவ்வாறு அவர் கூறினார்.

# இருதரப்புப் பிணக்குக் குறித்துப் பாக். உடன் பேசலாம் முஷாரப் மீது நம்பிக்கை இருக்கிறதென்கிறார் மன்மோகன் சிங்

(புதுடில்லி)

நியூயோர்க்கில் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பைச் சந்தித்துப் பேசியது ஆக்கபூர்வமாக அமைந்ததென்றும், இந்திய, பாகிஸ் தான் இடையிலான பிரச்சினைக ளுக்குத் தீர்வுகாணப் பாகிஸ்தான் அதிபருடன் பேச்சுக்கள் நடத்தலா மென்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் இம்மாதம் 24ஆம் திகதி பாகிஸ்தான் அதிப ரைச் சந்தித்துப் பேசியது எதிர் பாராத மோதல் போன்று இருந் ததா? என்று விமானநிலையத்தில் வைத்துச் செய்தியாளர்கள் கேட்ட தற்கு, தான் ஜெனரல் முஷாரப்பை நம்புவதாகவும், அவருடன் இரு நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பேச்சுக்கள் நடத்தலாம் என்றும் மன்மோகன்சிங் கூறினார். முஷாரப்பை நியூயோர்க்கில் சந்தித் துப் பேசியதில் இரு நாடுகளுக் கிடையிலான உறவு புதிய தொடக் கம் என்றும் இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கச்சந்திப்பு என்றும் மன்மோகன்சிங் ஏற்கனவே கூறி யிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே இயல்பு நிலையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த, நியூயோர்க்கில் இருதலைவர்களின் பேச்சுக்களின் போது முடிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## தையல் பயிற்சி நெறிக்கான நேர்முகத்தேர்வு-2004

நிதித்துறை வழங்கல் பகுதியால் தொடங்கவுள்ள தையல்பயிற்சி நெறிக்கு விண்ணபித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 29.09.2004 அன்று மு.ப.10.00 மணிக்கு இலங்கை வங்கிக்கு அருகாமை, கிளிநொச்சியிலும், 30.09.2004 அன்று மு.ப. 10.00 மணிக்கு அந்திவானம் பதிப்பகம் புதுக் குடியிருப்பிலும் நடைபெற இருப்பதனால் விண்ணப்பதாரிகள் அனைவரையும் குறித்த நாளில் தவறாது சமுகமளிக்குமாறு அறியத் தருகிறோம்.

தகவல்:- ஆளுகை,
வழங்கற்பகுதி,
நிதித்துறை.

(5122)



## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுக் காணி விற் பனைக்குண்டு. தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316

(சி-10419)




## புதிய பணிமனை திறப்பு விழா

யாழ்.சாலை,பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள வட பிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிமனைத் திறப்பு விழா எதிர்வரும் 2004.10.02 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாக நடைபெறவுள்ளது. சங்கத்தில் உறுப்புரிமை பெற்ற உரிமையாளர்கள்,சாரதிகள்,நடத்துனர்கள் அனைவரையும் தவறாது இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர் சபை,
பணியாளர்கள்,
வ.பி.பா.ஊ.உ..கூ..சங்கம்,
பரந்தன்,கிளிநொச்சி

(சி-10438)


# ஐ.சி.சி சம்பியன் கோப்பை வெற்றி புதிய ஆரம்பத்தைக் கொடுத்துள்ளது


பிரைன் லாறா


மேற்கு இந்தியத்தீவு அணிக்கு சம்பியன் கோப்பைப் பந்தயம் புதிய ஆரம்பத்தைக் கொடுத்துள்ளது என்று அணித்தலைவர் லாறா பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

அனைத்து விதமான கணிப்புகளையும் பொய்யாக்கி பரபரப்பான சம்பியன் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவு வெற்றி பெற்றது. வெற்றிக்கு 70 ஓட்டம் தேவை என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவு 8 விக்கெட்டுக்களை கோட்டை விட்டது. இந்தக் கட்டத்தில் கொஞ்சம் தெம்படைந்த இங்கிலாந்து அணித் தலைவர் வோகன் மெல்லமெல்லத் தோல்வியை முத்தமிட்டுக்கொள்ள வேண்டிய பரிதாபத்திற்குத் தள்ளப்பட்டார்.

பிரவுன் மற்றும் பிராட்ஷா ஜோடி 9ஆவது விக்கெட்டுக்கு நிலைத்து ஆடி 71 ஓட்டங்கள் தேடிக்கொடுத்தது கடந்த 79ஆம் ஆண்டு உலகக்கோப்பைக்குப் பின்னர் மேற்கிந்தியத்தீவு அணிக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரிய வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றிக்குப் பின்னர் அணித்தலைவர் லாறா நிருபர்களிடம் கூறுகையில், இந்த வெற்றி உலகக் கோப்பை வெற்றிக்கு இணையானது கிடையாது. இருந்தாலும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். தோல்வியை மட்டும் சந்தித்து வந்த மேற்கிந்தியத் தீவு அணிக்கு சம்பியன் கோப்பைப் பந்தயம் புதிய ஆரம்பத்தைக் கொடுத்துள்ளது. இனிமேல்தான் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். இந்த வெற்றியை இனிவரும் தொடர்களில் தக்கவைத்துக்கொள்ளபுதிய அணுகுமுறை தேவை என்றார். பந்தயத்தில் கலந்து கொண்ட அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய அணிகள் முந்தைய மோதல்களில் தோல்வி கண்டு வெளியேறிவிட்டன. உண்மையிலேயே மேற்கிந்தியத்தீவு அணிக்கு இந்த வெற்றி ஒரு புதிய ஆரம்பம்தான் என்றார்.


பெலாரசின் விலாடிமிர் வாலஸ் கவ்வை வென்ற அன்டிரெர்டிக் டேவிஸ் கப் போட்டியையும் தான் துணிவாக எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

## தோல்விகளுக்கு மன்னிப்புக் கிடையாது அணித்தலைவர் கங்குலி ஆக்ரோசம்



தோல்விக்கு மன்னிப்புக் கிடையாது என்று இந்திய அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார். ஆசியக் கோப்பையைத் தொடர்ந்து ஐரோப்பியக் கண்டத்தில் நடந்த மூன்று தொடர்களில் இந்தியக் கிரிக்கெட் அணி மோசமாகத் தோற்றது. பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்த சம்பியன் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு எதிராகத் தோல்வி கண்டு அரையிறுதி வாய்ப்பை இந்தியா கோட்டை விட்டது. அடுத்தடுத்த தோல்வியால் இந்திய அணித்தலைவர் அதிர்சியடைந்துள்ளார். இவரின் தலைமைப்பதவிக்கு வேட்டு வைக்கும் வகையில் தற்போது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துள்ளது. வருகிற ஒக்ரோபர் 6ஆம் திகதி முதல் இரு அணிகளும் நான்கு டெஸ்போட்டியில் மோதவுள்ளன. இந்த நிலையில், இதுவரை கிடைத்த தோல்விகளுக்கு எந்தக் காரணம் கூறினாலும் சரியாக இருக்காது. என்னைப் பொறுத்தவரை தோல்விக்கு மன்னிப்பே கிடையாது. இந்திய அணி மீது ஏற்பட்டுள்ள களங்கத்தைத் துடைக்கவேண்டிய நேரம் வந்தது விட்டது என்றார்.




## சிம்பாப்வே சுற்றுலாவில் பங்கேற்பது குறித்து தீர்மானம் எடுக்க முடியா நிலையில் ஸ்ரோஸ்



சிம்பாப்வே செல்லும் இங்கிலாந்து அணியில் பங்கேற்பது தொடர்பில் இதுவரை எதுவித தீர்மானத்தையும் தான் எடுக்க முடியாதிருப்பதாக அவ்வணியின் வீரர் அன்ரு ஸ்ரோஸ் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே செல்லும் நமது நீதியான கோரிக்கை ஆழமானது. என்னைப் பொறுத்தளவில் நான் இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை என ஸ்ரோஸ் தெரிவித்துள்ளார்.எனினும், இது தொடர்பாக தெரிவுக் குழுத்தலைவர் டேவிட் கிறேனி முன்னர் மறுப்புத் தெரிவித்த ஹார்மிசனோடு ஏனைய வீரர்களும் இணைந்து கொள்வார்களா? என்பதைக் கூற மறுத்துள்ளார். அத்துடன் வீரர்களோடு கலந்துபேசி அணி பற்றி இன்று அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ராவிட்டை வீழ்த்துவதே எங்களது இலக்கு சுழற்பந்து வீரர் வோர்ன் கூறுகின்றார்



டெஸ்டில் ராவிட்டை ஆட்டமிழக்கச் செய்வதே எங்களது இலக்கு என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் கூறியுள்ளார்.ஆடுகளத்துக்கு வெளியே நானும் ராவிட்டும் நல்ல நண்பர்கள். டெஸ்ட் போட்டியில் அவர் சிறப்பாக ஆடி வருகிறார். இந்தியாவின் துடுப்பாட்ட வீரராக அவர் இருக்கிறார்.

ராவிட்டின் ஆட்டத்தைப் பல முறை பார்த்து இருக்கிறேன். அவரை அவுட் செய்யக் கஷ்டப்பட்டும் இருக்கிறோம். இந்த முறை அவரை அவுட் செய்வதே எங்கள் இலக்காக இருக்கும்.

ராவிட்டுக்கு எதிராக எப்படிப் பந்து வீசுவது என்பது குறித்து திட்டம் வைத்து உள்ளேன். இந்தியத் துடுப்பாட்ட வீரர்களின் சவால்களைச் சந்திக்கத் தயார்.

டெண்டுல்கரும் தலை சிறந்த வீரர். காயம் அடைந்த அவர் முதல் டெஸ்டில் விளையாடுவார் என்று கருதுகிறேன்.

கடந்த ஆண்டுகளில் இந்திய மண்ணில் இதுவரை தொடரைக் கைப்பற்றியது இல்லை. 1998,2001 ஆம் ஆண்டு வாய்ப்பு இருந்தது. அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வில்லை என்றார்.

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் முழு வேகத்தில் பந்து வீசவுள்ளேன்

### பிரெட்லீ



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்போட்டியில் முழு வேகத்தில் பந்து வீசவுள்ளதாக அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைப் போல் அல்லாமல் இங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப எங்களது பந்து வீச்சில் சில மாற்றங்கள் இருக்கும் எனவும் அவர் கூறினார்.

இந்திய அணியின் முதல் ஐந்து துடுப்பாட்ட வீரர்களை விரைவில் ஆட்டமிழக்கச் செய்யும் வகையில் தங்கள் திட்டம் இருக்கும் என்றும் பிரெட்லீ கூறினார்.

மற்றுமொரு நட்சத்திர பந்துவீச்சாளரான கிளென் மெக்ராத்தும் தொடக்கத்திலேயே விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவது மிகமிக முக்கியம் எனக் கூறியுள்ளார்.

இந்திய ஆடுகளங்களில் வேகப்பந்து வீச்சாளர்கள் பந்து வீசுவது சவால் மிகுந்த அனுபவம் எனவும் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

## சந்திரோதயா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்து, கைப்பந்து போட்டிகள்

கழக மாவீரர்கள் நினைவாக உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்து, கைப்பந்து போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மூன்று நாட்கள் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் 3ஆம் திகதி நடைபெறுகின்றது. கால் பந்துப் போட்டி 9 பேர் கொண்டதாகும்.

இச்சுற்றுப் போட்டி நிறைவில். சிறந்த அணி, சிறந்த வீரர், சிறந்த கோல்காப்பாளர், தொடர் நாயகன் ஆகியோருக்கான பரிசில்கள் வழங்கப்படுவதுடன் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனக் கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ட்டி தொடர்பான அட்ட வல... வெகுவிரைவில் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆசிரியர்களுக்கு இடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டி

எதிர்வரும் ஒக்ரோபர் 06ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்தப்படவுள்ள உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் வலய ஆசிரியர்கள், பணியாளர்களுக்கான சதுரங்கப் போட்டி அண்மையில் ஒட்டுசுட்டானில் நடைபெற்றது.

இதில் முதலாவது இடத்தை முத்தையன்கட்டு வலதுகரைப் பாடசாலை ஆசிரியர் திரு. சி. சுரேஸ்நாதனும், இரண்டாம் இடத்தை வலயப் பணிமனைப் பணியாளர் திரு. விஸ்வநாதனும், மூன்றாம் இடத்தை முத்தையன்கட்டு இடதுகரைப் பாடசாலை ஆசிரியர் திரு. சசிக்குமார் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 06ஆம் திகதி மாங்குளம் வலயப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தனர் வலயப் பணிமனையினர்.

## நிர்வாகத் தெரிவு

26.09.2004 அன்று பிற்பகல் 5.30 மணியளவில் கிளி.மாவட்ட கராத்தே பிரதம ஆசிரியர் கு.விஜயராஜ் தலைமையில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெறறது. இக்கூட்டத்திற்கு சுமார் 25இக்கு மேற்பட்ட கராத்தே வீரர்கள் கலந்துகொண்டனர் இந்நிகழ்வில் கருத்துரையினை கிளி.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் திரு.ராஜா ஆற்றினார்.

## இந்திய சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவிப்பு




இந்தியப் பயணம் திட்டமிட்டபடி நடக்கும் என்று தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. குரோனே தலைமையிலான தென்னாபிரிக்க அணி கடைசியாக கடந்த 2000ஆம் ஆண்டு இந்தியா வந்தது. அப்போது குரோனே, கிப்ஸ் போயே ஆகிய வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக டில்லிப் பொலிஸ் குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பான தொலைபேசி ஆதாரத்தையும் பொலிஸ் கைப்பற்றியது. இது தொடர்பான டில்லிப் பொலிஸ்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக சம்பந்தப்பட்ட வீரர்களிடம் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது. முடிவில் குரோனே தனது தவறை ஒத்துக் கொண்டார். இதனால் அவருக்கு ஆயுள்தடை விதிக்கப்பட்டது. இதன் பின்னர் அவர் விமான விபத்தில் சிக்கி மரணமடைந்தார். கிப்ஸ் மற்றும் போயே ஆகிய இருவருக்கும் தலா ஆறுமாதம் தடை விதிக்கப்பட்டது.

தற்போதைய தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் மற்றும் போயே இடம்பிடித்துள்ளனர். தென்னாபிரிக்க அணி இந்தியா வரும்போது இவர்களிடம் டில்லிப் பொலிஸ் விசாரணை நடத்த வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாகத் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை பலமுறை டில்லிப் பொலிஸ் அதிகாரியிடம் விளக்கம் கேட்டும் எந்தப்பதிலும் கிடைக்க வில்லை. தென்னாபிரிக்க வீரர்களிடம் விசாரணை நடத்துவதாக இருந்தால் இந்தியப் பயணத்தை இரத்துச் செய்வோம் என்று தென்னாபிரிக்க சபை செய்தித் தொடர்பாளர் கூறினார். இந்த நிலை தற்போது நீங்கியுள்ள நிலையில் இச்சுற்றுலா திட்டமிட்டபடி அமைத்துள்ளது.



### சிந்தனைக்கு

பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சமாதானம் தேவையில்லை!

டோக்கியோவில் உதவி வழங்கும் நாடுகள் இணக்கம் தெரிவித்தமைக்கு அமைய 45பில்லியன் (45000கோடி) ரூபா கிடைக்கக் கூடிய வாய்ப்புள்ளது, தற்போது அந்நிதியில் ஒவ்வொரு கட்டமாகத் நாம் பெற்றுவருகிறோம். ஆனால், சமாதான முயற்சிகளை மேற்கொண்டால் மட்டும்தான் இந்நிதியைப் பெறமுடியும் என ஐ.தே.க கூறியது என அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளமையானது சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலம் குறித்துப் பலத்த சந்தேகத்தை எழவைக்கின்றது.

டோக்கியோவில் வாக்குறுதி அளிக்கப்பட்ட 45பில்.ரூபாவிற்கான நிதி உதவியின் ஒருபகுதி கிடைக்கப்பெற்றதோ இல்லையோ சிறிலங்கா அரசிற்கு அண்மைக்காலத்தில் சிறுஅளவிலேனும் நிதியுதவி கிடைத்தது என்பது நிராகரிக்கப்படுவதற்கு இல்லை. இந்நிலையில் டோக்கியோ நிதியுதவியின் ஒருபகுதி கிடைத்ததோ இல்லையோ, அரசிற்கு நிதியுதவி கிடைத்துள்ளது என்ற அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றுக்களை முற்றாக நிராகரித்துவிட முடியாது.

மங்களசமரவீர சனாதிபதியின் விசுவாசத்திற்குப் பாத்திரமானவர். இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள முக்கியஸ்தர்களில் பிரதானமானவர். அதிலும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்-ஜே.வி.பி.க்கும் இடையில் ஒரு கூட்டணி உருவாவதற்கும், சிறுபான்மை அரசாங்கமாக இருந்த ஐ.ம.சுதந்திர முன்னணிக்கு ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை இழுத்துவருவதற்கும், பெரும்பான்மை அரசாங்கமாக ஐ.ம.சு.முன்னணி மாறுவதற்கும் காரணமாக இருந்தவர்.

ஆகையினால் மங்கள சமரவீரவின் நிதியுதவி மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான கூற்றுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்றி நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற மங்கள சமரவின் கூற்றுக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்போதைக்குக் கட்டாயமானவையல்ல என்பதையே வெளிக்காட்டுபவையாகவுள்ளன.

டோக்கியோவில் வாக்குறுதியளிக்கப்பட்ட நிதி கிடைக்கப்பெற்றதோ இல்லையோ வெளியில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி சிறிதளவாயினும் அதனைக் கொண்டு சிறிலங்காவை நிர்வகிக்க அதாவது ஆட்சியை நடத்திச்செல்ல முடியும் என் அரசாங்கம் நம்புவதுபோல் தெரிகின்றது.

இந்நிலையில்தான் நிதியுதவிகள் கிடைக்கப்பெறுவதற்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பது அவசியமானதாக இல்லை என்ற ரீதியில் அமைச்சர் மங்களசமரவீரவின் பேச்சு உள்ளது. இது அடிப்படையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் முக்கியமானதொரு நிலைப்பாடாகக் கொள்ளத்தக்கதாகும். அதாவது மங்கள சமரவீர அரசாங்கத்தில் வகித்துவரும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பார்த்தால் இக்கூற்றுக்கள் தற்போதைய அரசியற் சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும்.

அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கம் தயாராகவேயுள்ளது, அரசாங்கத்தை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்துக்கொண்டிருக்கையில் சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைப் போக்கிக்கொள்ள டோக்கியோ நிதியுதவி தேவையில்லை. அன்றிப் பெற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டோம், என்று மங்கள சமரவீர கூறுவது ஜே.வி.பி.யினரின் நிலைப்பாட்டை எடுப்பதாகவே கொள்ளவேண்டியதாகவுள்ளது.

அதாவது நிதியுதவி பெற்றுக்கொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுதல் கூடாது என்ற ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டிற்கு இது ஆதரவானதாகும். ஒருவகையில் பார்க்கையில் ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாடு சரியானதாக இருக்கலாம். ஆனால் ஜே.வி.பி.யின் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டுடன் அதனையும் பொருத்திப்பார்க்கும் போதுதான் இது இலங்கையில் அரசியலில் ஏற்படுத்தப்போகும் தாக்கத்தினை/விளைவுகளைப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் டோக்கியோ நிதியுதவியை நிராகரிக்கும் ஜே.வி.பி. வேறு நாடுகள் சிலவற்றிடம் இருந்து நிதியுதவிகளைப்பெற்றுக் கொள்ளத்தயாராகவுள்ளது.

அதாவது ஜே.வி.பி. விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்டதாக இல்லை. விடுதலைப்புலிகளுடன் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட இடைக்காலசபை குறித்த பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. அத்தகையதொரு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் தாம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிடப் போவதாகவும் தொடர்ச்சியாக அது கூறியும் வருகின்றது.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாமதப்படுவது நிதியுதவிகளைப் பாதிக்கப்போவதில்லை என்ற மங்கள சமரவீரவின் கூற்றுக்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பதைவிட ஜே.வி.பி.யுடனான கூட்டுக்குறித்து அரசாங்கம் அதிக அக்கறை/கவனம் செலுத்துவதாகவே கொள்ளத்தக்கதாகும். இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துச் சனாதிபதி சந்திரிகா கூறிக்கொள்வதெல்லாம் உலகை ஏமாற்றுவதற்கானவையே ஒழிய. வேறு எதற்காகவும் அல்ல. இதனைச் சிறிலங்காவிற்கு உதவி செய்பவர்கள் புரிந்துகொண்டால் சரி.

# மீண்டும் பதவியைப் பெறக்கூடிய வகையில் அரசியலமைப்பை மாற்றக் கருத்துக் கணிப்பு

## -சனாதிபதி சந்திரிகா திட்டம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அரசியலமைப்புக்கேற்ப தனது பதவியை வகிக்கும் காலம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கும் வேளையில் அவர் மீண்டும் சனாதிபதியாகத் தேர்தலில் போட்டியிட ஏற்றவாறு அல்லது அதிகாரமுள்ள பிரதமராக நியமனம்பெறக்கூடிய வகையில் அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு பொதுமக்களின் கருத்தை அறிய கருத்துக் கணிப்பொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டையை அவசியமாக்கும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அரசு எடுத்துவரும் துரித நடவடிக்கை மேற்கூறிய கருத்தறிதல் நடவடிக்கையின் ஒரு அங்கமாகும் எனக் கூறப்படுகிறது.

தற்போதைய அரசியலமைப் பின்படி 2005 டிசம்பர் 22ஆம் திகதியுடன் சந்திரிகாவின் பதவிக் காலம் முடிவடைகிறது. அதன் பின்னர் அவர் மூன்றாம் முறையாகப் போட்டியிட முடியாது. அத்துடன் அவரது அரசியல் வாழ்வும் அஸ்தமித்துவிடும் இதனை மாற்றிச் சந்திரிகா தொடர்ந்து அரசியல் பதவிகளில் இருப்பதை நோக்கமாகக் கொண்டு புதிய கருத்துக் கணிப்பை நடத்தவிடுகின்றார்.

தற்போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாதிருப்பதால் அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவருவது கடினமாகவுள்ளது. ஆகவே, அவருக்குள்ள ஒரே மார்க்கம் அரசியலில் அமைப்பு தடையை மாற்றுவது அவருக்குத் தேவையான ஒரு அரசியல் யாப்பை மக்களின் கருத்துடன் அமைப்பதும் ஆகும்.

இக் கருத்துக் கணிப்பை நடத்தும் போது அடையாள அட்டை அவசியம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டால் வடக்கு- கிழக்கிலும் மலையகத்திலும் உள்ளவர்கள் எதிர்த்து வாக்களிப்பது தடுக்கப்படும். அத்துடன் சந்திரிகா கருத்துக்கணிப்பில் வெற்றி பெறலாம் என்பதும் அவரின் திட்டமாகும் என ராவய பத்திரிகை தெரிவிக்கிறது.

# சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்க ஹெலஉறுமயவிடம் கோரினார் சனாதிபதி

சுதந்திரக் கூட்டமைப்பு அரசிற்கு ஆதரவு வழங்குமாறு ஜாதிகஹெல உறுமயக் கட்சியிடம் சனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஐ.நாடுகள் சபையில் உரையாற்றுவதற்காக நியூயோர்க் செல்லுகின்ற வேளை லண்டன் சென்ற அவர் அங்கு தங்கியிருந்த ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார். எல்லாவெல மேதானந்த தேரர், உருவே தம்மாலுக்க தேரர், கொட்டபொல அமரசீர்தாபி மற்றும் உருபத்தே நந்த ஆகியோர் அங்கு தங்கியிருந்தனர்.

உருவே தம்மாலுக்க தேரருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு அரசிற்கு ஆதரவு வழங்குமாறு கோரியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்த அவர் தேசிய நலன்களுக்கு அவசியமான வேளைகளில் அரசிற்கு ஆதரவு வழங்க இணங்கியதாகத் தெரியவருகிறது. இதனைத் தொடர்ந்து அவர் நாடு திரும்பிப் பாராளுமன்றத்தில் அப்போது கொண்டுவரப்படயிருந்த வரித் திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவு வழங்குமாறு சனாதிபதி சந்திரிகா அவரிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அதனை ஏற்றுக் கொண்ட அவர் உடனடியாக நாடு திரும்பிச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் தெரியவருகிறது.

# ரயில் போக்குவரத்துக் கட்டணங்கள் எதிர்வரும் வாரம் முதல் அதிகரிப்பு

இலங்கையில் நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் நிலையில் எதிர்வரும் வாரம் முதல் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டணங்களின் உயர்வு வீதம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை எனினும் அந்தக் கட்டண உயர்வுகளின் மூலம் ரயில் சேவைக்கு வருடம் ஒன்றுக்கு 550 மில்லியன் ரூபா இலாபமாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் எரிபொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வும் இந்தக் கட்டண உயர்வுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க மினசாரக் கட்டணங்களில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் 3.8 வீத உயர்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இலங்கையில் புதிதாக நுரைச் சோலை அனல் மின் மையம மற்றும் மேல் கொத்மலை நீர்மின் திட்டம் என்பவற்றை ஆரம்பித்தால் மாத்திரமே மின்சார அலகின் உற்பத்திச் செலவை 2 ரூபா 50 சதத்துக்கு குறைக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மின்சார அலகு ஒன்றின் உற்பத்திச் செலவு 9 ரூபா 70 சதமாகும்.

– குருநாகலில் பாரிய கொள்ளைகளில் ஈடுபட்ட –

# பொலிஸ் அதிகாரியின் மகனும் இரு பொலிசாரும் கைது

குருநாகல் பகுதியில் பாரிய கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தமை தொடர்பாக சிறிலங்காப் பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகனும் பிங்கிரிய பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்கலாகப் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த குழுவினர் பல வருடங்களாக பொலிசாரின் உதவியுடன் பெருமளவு கொள்ளைகளில் ஈடுப்பட்டு வந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (32)

# வட-கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் மழை தொடரலாம் என அறிவிப்பு

நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாகக் குறிப்பிட்ட ஏழு இடங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்படும் எனக் காலநிலை அவதான மையம் அறிவித்துள்ளது இதன்படி களுத்துறை,மாத்தறை,இரத்தினபுரி கேகாலை,காலி போன்ற இடங்களில் இந்த அனர்த்த அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக தற்போது கம்பஹா மற்றும் களுத்துறைப் பகுதிகளில் மாத்திரம் சுமார் 3500 குடும்பங்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளன. தொடங்கொட என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றும் இடிந்து வீழ்ந்துள்ளது. இதேவேளை நாட்டில் வடக்கு,கிழக்கு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்தும் மழை பெய்யும் எனக் காலநிலை அவதான மையம் தெரிவித்துள்ளது. இடையிடையே இடி மின்னல் இருக்குமாதலால் மக்களை அவதானமாக இருக்குமாறும் அந்த மையம் கேட்டுள்ளது. (32)

# ஜெனிவாக் கூட்டத்தில் கலந்துகொள்ள சபாநாயகர் தலைமையில் குழு

ஜெனிவாவில் நடைபெறும் அனைத்துலகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக சபாநாயகர் உட்பட்ட குழுவினர் இன்று அங்கு விஜயம் செய்கின்றனர். சபாநாயகர் லொக்குபண்டாரவின் தலைமையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் முத்து சிவலிங்கம்,பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் அஜித் குமார் ஆகியோர் பங்கு பெறுகின்றனர். இந்த மாநாடு நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் தொனிப்பொருள் மனித உரிமைகள் காப்பும்,பயங்கரவாதமும் ஆகும்

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஆட்சேபித்து விரைவில் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

## ஐக்கிய தேசியக் கட்சி முடிவு

(கொழும்பும்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஆட்சேபித்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் நேற்றுத் தீர்மானித்துள்ளது கொழும்பில் நடைபெற்ற கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தமது தேர்தல் உறுதி மொழிகளில் இருந்து விலகிச் செல்வதாகக் குற்றம் சுமத்தினார். எனவே தாம் அரசாங்கத்திற்கு எதிராக நாடாளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை கட்சியின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் விரிவான செயற்றிட்டங்கள் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

# மன்னார் கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் பயிற்சி

## கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகப் படைத்தரப்புப் போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவிடம் முறையிட்டுள்ளது. சுமார் 400 கடற்புலிகள் வரை நேற்று முன்தினம் முழு நாளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகப் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது இது போர் நிறுத்த மீறல் எனவும் அது சுட்டிக் காட்டியுள்ளது. (32)

# நோர்வேத் தூதரகம் முன் ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம்

ஈ.பி.டி.பி. குழுவினர் நேற்றுக் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அண்மையில் வெள்ளவத்தையில் வைத்துக் கொல்லப்பட்ட சிங்கம் எனப்படும் உறுப்பினரின் உடலைத் தாங்கிய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது தமிழீழ விடுதலைப்புலிகளே தமது உறுப்பினரின் கொலைக்குக் காரணம் எனவும், எனவே தமக்கு பாதுகாப்பை ஏற்படுத்தித் தர சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது இதனையடுத்து தாம் இந்த விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதாக, நோர்வேத் தூதரகத்தினர் உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (32)

## போதைப்பொருட்களைக் கடத்துபவர்களென

# முஸ்லிம், தமிழர்கள் மீது அஸ்கிரிய பீடாதிபதி குற்றச்சாட்டு!

இந்த நாட்டிற்குள் போதைப் பொருட்களைக் கொண்டு வருபவர்கள் முஸ்லிம்களும் தமிழர்களுமே ஆவர் இதனால் 80 வீதமான பௌத்த இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு ஆளாகியுள்ளனர் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்த ரக்கிததேரர் தெரிவித்துள்ளார். இது குறித்து எடுத்துக் கூறினாலும் எவரும் காதில் வாங்கிக் கொள்வது இல்லை எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

சிங்கள பௌத்த பிரஜைகள் குழு கண்டி அஸ்கிரிய பலிபான சந்தானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்திய வருடாந்த மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் அதிகமான பௌத்த நாடுகளுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் எதிர்வரும் 20 அல்லது 30 வருடங்களில் ஏற்படலாம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். முஸ்லிம்கள் இவ்வாறே பௌத்த நாடுகளை ஆக்கிரமித்தனர் எனத் தெரிவித்த அஸ்கிரிய பீடாதிபதி இந்த 'வழியிலேயே வியாபாரம் என்ற வகையில் போதைப்பொருட்களை இந்த நாட்டிற்குள் கொண்டு வந்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட ஹெல உறுமய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் இலங்கை சிங்கள பௌத்தர்களின் தேசமாகும் என வலியுறுத்தியுள்ளார். இந்த நாட்டில் எந்த இனத்தவர்களும் வாழலாம் அதற்கான சுதந்திரம் உண்டு எனத் தெரிவித்த எல்லாவல மேதானந்த தேரர் தனி நாடு எனக் கூறிக் கொண்டு நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றவோ அல்லது நாட்டின் ஒருபகுதியைக் கைப்பற்றவோ எவருக்கும் உரிமை கிடையாது என தெரிவித்துள்ளார். இந்த நிலையில் விடுதலைப்புலிகள் முதலில் நாட்டின் ஒருபகுதியைக் கைப்பற்றிக் கொண்டு பின்னர் நாட்டின் நிர்வாகத்தை தம்வசப் படுத்துவதே அவர்களின் நோக்கமாகும் என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். (32)

### மனித...

மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து நேற்றுப் பிற்பகல் சம்பந்தப்பட்ட கைதி குறித்த விபரங்களை அறிவதற்காகவும், அவரது நலன்கள் குறித்து ஆராய்வதற்காகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி றுவான் சந்திரசேகர மனித உரிமைகள் குழுவின் சித்திரவதைக் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரி பெறோஸ், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான பிரிவின் அதிகாரி பற்றிக் ஆகியோர் யாழ். பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சம்பந்தப்பட்ட கைதி தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

எனினும் தாம் அப்படிப்பட்ட எவரையும் கைது செய்யவில்லை எனப் பொலிசார் மறுத்துவிட்டாலும் சம்பந்தப்பட்ட கைதியுடன் சேர்த்துக் கைது செய்யப்பட்ட வேறு இருவரது தகவல்கள் அடிப்படையில் யாழ். பொலிஸ் நிலையத்தின் மேல்மாடியில் உள்ள சித்திரவதைக் கூடத்தில் சம்பந்தப்பட்ட கைதி இருப்பதாகவும் அவரைத்தாம் நேரில் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் பொலிஸ் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் சித்திரவதைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதியைச் சென்று பார்வையிட முற்பட்டனர்.

இதனையடுத்து அங்கு திடீரென ஒன்று சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட பொலிசார் மனித உரிமைகள், ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது கண்மூடித்தனமாக குண்டான் தடிகளால் தாக்கி அவர்களைத் துரத்தியடித்து விட்டனர்.

இதனையடுத்து இவர்கள் தேடிச் சென்ற கைதியை நறக்கதற யாழ். பொலிஸ் நிலையத்திரவதைக் கூடத்திலிருந்து தரதரவென இழுத்து வந்த ஆயுதம் தாங்கிய பொலிசார் அவரை இராணுவ வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனைக் கண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இச்சம்பவங்கள் குறித்து யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தயாசெனவிரட்ணவிடம் முறையிட்டபோது அதற்கு அவர் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இச்சம்பவம் குறித்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி நுவான் சந்திரசேகரா,

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய கைதி மற்றும் அங்கு விசாரணைக்குச் சென்ற மனித உரிமைகள் அதிகாரிகளுடன் பொலிசார் நடந்து கொண்டவிதம் மனித உரிமைகளை அவமதிக்கும் செயல் எனவும், இந்நிலை தொடர்ந்தால் மனித உரிமைகளைச் சரிவரப் பேண முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்ததுடன் இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை அமைப்பு, இலங்கை மனித உரிமை ஆணைக குழு, இலங்கை பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (33,27)

# எதிர்க் கட்சித் தலைவர் ரணில் அடுத்த மாதம் இந்தியா விஜயம்

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரகால விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி மற்றும் முன்னாள் பிரதமர் அட்டல்பிகாரி வாஜ்பாய் ஆகியோருடன் பேச்சுக்கள் நடாத்துவார் என தெரிய வருகிறது.

### கிளிநொச்சி...

மேற்படி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தமிழ் இசைப்பாடல்கள், நாட்டுப்புறக் கலைகள், நாடகம், நாட்டுக்கூத்து, பண்பாட்டு ஊர்வலம் கிளி.முருகன் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகிப் பிரதான வீதிவழியாக விழா மண்டபத்தினைச் சென்றடைந்து அங்கு மாணவர்கட்குப் பரிசில் வழங்கல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது. (சோ,கு)

### ஈ.பி.ஆர்...

றத் தேர்தல் 2003 இல் ஈ.பி. ஆர். எல்.எவ்.(வரதரணி) சார்பில் போட்டியிட்டு வந்தவருமான வல்லி சுந்தரம்(வயது 66) என் பவரே சுட்டுக் கொல்லப்பட்ட வராவார்.

யாழ். நகரப்பகுதியிலிருந்து இணுவில் பகுதி நோக்கி உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த இவர் மீது உந்துருளியில் வந்த மற்றொருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

உயிரிழந்த நபரது சடலம் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 1997ஆம் ஆண்டு முதல் ஈ.பி.ஆர். எல்.எவ்(வரதர்)அணியில் இணைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. (27,33)

### புலிகள்...

அதற்கு அதனை ஆராய்வதாக ஐக்கிய நாடுகளின் செயலர் கூறிய செய்தியையும் சனாதிபதி செயலகம் வெளியிடவில்லை. இது தமிழீழ விடுதலைப்புலிகளின் விமர்சனத்திற்கு உள்ளாகும் என்பதன் காரணமாகவே அதனை சனாதிபதி செயலகம் ஊடகங்களுக்கு வெளியிடவில்லை. இருப்பினும் இந்தத் தகவல் சனாதிபதியின் தரப்பிலிருந்து வெளியாகியுள்ளது. (32)

### விடுதலைப்...

அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தற்போது ஐரோப்பாவில் தங்கியிருக்கும் மூத்த உறுப்பினர் பாலகுமாரனும் இணைந்து கலந்துரையாடலில் பங்கேற்பார்கள் எனவும் தெரியவருகின்றது.

ஐரோப்பா செல்லும் இக்குழு ஜெனிவாவில் இச்சந்திப்புக்களை முடித்துக்கொண்டு நோர்வே, ஜேர்மனி உட்படப் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொள்ள உள்ளதாகவும் இவ் விஜயத்தில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசனுடன் சந்திப்பொன்றை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பொங்குதமிழ்...

கனடா உட்பட சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் சமாதான வழித்தீர்வு முயற்சியை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம். இம்முயற்சியானது தமிழர் முழுமையான இயல்பு வாழ்க்கை நிலைக்குத் திரும்பவும், கொடிய ஆக்கிரமிப்புப் போர், பொருளாதாரத் தடைகளால் அழிக்கப்பட்டுவிட்ட தமிழர் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பவும், இறுதியில் தமிழர்களது ப்படை அபிலாசைகளைப் பூ..தி செய்கின்ற ஒரு தீர்வையும் பெற்றுத் தரும் என நம்புகின்றோம்.

போர் நெருக்கடிகள் நீங்கிய சூழலில், சமாதான வழித் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவபர்கள் தமிழர்களே. இந்நிலையில் தற்போதைய சமாதானத் தீர்வு முயற்சி வெற்றி பெறக் கீழ்வரும் தீர்மானங்களை முன் வைக்கின்றோம்.

01) சர்வதேசச் சட்டவல்லுனர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட தமிழர்களின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் (ISGA) அடிப்படையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் யாவும் இன்று தேக்க நிலையை அடைந்துள்ளதால், இந்தப் பேச்சுவார்த்தைகளை மீளவும் உடனடியாக ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி கனேடிய அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

02) சமாதானப் பேச்சுவார்த்தைகள் கனடாவில் நடைபெறுவதற்கு உதவுமாறு, இங்கு வாழும் மூன்று இலட்சம் தமிழ் கனேடிய மக்களின் சார்பில் கனேடிய அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

03) பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மக்களை அகதிகளாக்கி, அவர்களை அகதி முகாம்களில் அவஸ்தைப்படவிட்டு, அவர்களது வீடுகளை இராணுவ முகாம்களாக்கியுள்ள இராணுவத்தினரை அப்புறப்படுத்தி, உள்நாட்டு மக்களுக்கு அவர்களது வீடுகளை வழங்கும் ஆகக் குறைந்த மனித உரிமையையாவது மதிக்குமாறு இலங்கை அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

04) சமய வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் மக்களின் பாவனைக்குரிய பொது இடங்களை ஆக்கிரமித்திருக்கும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை அகற்றியும், மீன் பிடித்தல், விவசாயம் செய்வதற்கு கொடுக்கும் நெருக்கடிகளை நீக்கியும், சமாதானத்திற்கு எதிராக இராணுவப் புலனாய்வுடன் சேர்ந்து இயங்கி, மக்களின் அன்றாட வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைந்தும், மக்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்துமாறும், இலங்கை அரசைக் கேட்டுக் கொள்ளும்படி கனேடிய அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

05) குற்றச்சாட்டுகளோ, விசாரணைகளோ இன்றி வருடக் கணக்காக சிறையில் வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளை சர்வதேசச் சட்ட விதிகளை மதித்து விடுதலை செய்ய இலங்கை அரசைத் தூண்டுமாறு கனேடிய அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

06) யுத்தத்தினால் நீர்மூலமாக்கப்பட்ட வட-கிழக்குப் பகுதிகளைப் புனருத்தாரணம் செய்யும் பெரும் பணியை கனேடிய அரசாங்கமும், சர்வதேச சமூகமும் நேரடியாகவே ஏற்று நடாத்த வேண்டுமெனக் கனேடிய அரசையும், சர்வதேச சமூகத்தையும் நாம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

07) இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சிங்கள அரசியல் கட்சிகள் தங்களிடையேயான பிணக்குகளைப் புறந்தள்ளி, தமிழர்களின் நேர்மையான சமாதான முயற்சிக்குக் கண்ணியமான, சுமூகமான ஒத்துழைப்பை ஒருசேர வழங்குமாறு கேட்டுக் கொள்ளும்படி கனேடிய அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.